# செம்மணி

நிலம் 3 துகள் 111 வள்ளுவர் ஆண்டு 2052, 03 - 09 புரட்டாதி 2022 வாரமலர் பக்கங்கள் 28


# 67 லட்சம் மக்களுக்கு போதிய உணவில்லை

## உலக உணவுத் திட்டம் அறிக்கை



இலங்கையில் 67 லட்சம் மக்கள் போதியளவு உணவை எடுத்துக்கொள்வதில்லை என்று உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது. 63 லட்சம் மக்கள் உணவு பாதுகாப் பின்மை நிலைக்குள் சிக்கிக் கொண்டுள்ளார்கள் என் றும் அது தனது ஆவணி மாத அறிக்கையில்

பக்கம் 27



# லிட்ரோ காஸ் விலை குறையும்

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை வரும் 5ஆம் நாள் முதல் மேலும் குறையும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. எனினும் புதிய விலை என்ன என்பது அறிவிக்கப்படவில்லை.

பொருளாதார நெருக்கடியைத் தொடர் ந்து சமையல் எரிவாயுவின் விலை எக்கச்சக்கமாக எகிறியது. அது மட்டு மல்லாமல் சந்தையில் எரிவாயுவைப் பெற முடியாத தட்டுப்பாடும் ஏற்பட் டது.

கடந்த சில வாரங்களாக எரிவாயுவுக் கான தட்டுப்பாடு நீங்கியிருந்தது. சந்தையில் அதனைச் சாதாரணமாகப் பெறக்கூடிய நிலை ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் எரிவாயுவின் விலை மேலும் குறையும் என்று லிட்ரோ எரி வாயு நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார். புதிய விலை விரை வில் அறிவிக்கப்

பக்கம் 03

# பொது மக்களின் கடிதம், அழைப்புக்கு உடன் பதில் வழங்குவது கட்டாயம்

## அரச அலுவலங்களுக்கு பொது நிர்வாக அமைச்சு அறிவுறுத்து

பொதுமக்களின் கடிதங்கள், தொலை பேசி அழைப்புக்கள், மின் அஞ்சல்க ளுக்கு உடனடியாக அரச அலுவல கங்கள் பதிலளிக்கவேண்டியது கட் டாயம் என்று பொது நிர்வாக அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அரச அதிகாரிக ளுக்கு சுற்றறிக்கை ஒன்றை அமை ச்சு அனுப்பி வைத்துள்ளது. அதில், பொதுமக்களின் தேவைகள் தொடர் பான கடிதங்களுக்கு உடனடியாகப் பதிலளிக்க முடியாத நெருக்கடி இருந் தால் முழுமையான பதிலை வழங்கு வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதைக் குறிப்பிட்டு இடைக்கால பதில் ஒன்றை

பக்கம் 03

# பட்ஜெட் நிறைவேறியது!

## 120 பேர் ஆதரவு; 5 பேர் எதிர்ப்பு

அரச தலைவரும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன் றத்தில் முன்வைத்த இடைக்கால நிதி நிலை அறிக்கை (பட்ஜெட்)120 உறுப் பினர்களின் ஆதரவுடன் வெள்ளிக் கிழமை நிறைவேறியது. எதிராக 5 வாக் குகள் விழுந்தன. எதிரணியைச் சேர் ந்த 43 உறுப்பினர்கள் வாக்களிப்பிலி ருந்து விலகியிருந்தனர்.

ஜேவிபியின் 3 உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்டசியின் 2 உறுப்பினர்களுமே எதிர்த்து வாக் களித்தனர். வாக்கெடுப்புக்கு இரு மணி நேரம் முன்னதாக, வாக்கெடுப் பைப் புறக்கணிக்கப்போவதாக ஐக்கிய மக்கள் சக்தியும், பொது ஜன பெரமுன விலிருந்து பிரிந்து சென்ற அணியின ரும் அறிவித்தனர்.

நாட்டின் நெருக்கடி நிலையைச் சமா ளிக்கும் வகையில்

பக்கம் 03

# சனி, ஞாயிறு ஒரு மணிநேர மின்வெட்டு

இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் ஒரு மணி நேரமும் திங்கட்கிழமை இரண்டு மணி நேரமும் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

வியாழன் மற்

பக்கம் 03

செம்மணி
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# ஜெனிவா சொல்லும் அரசியல் பாடம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இந்த மாதம் தொடங்கவுள்ள நிலையில் அது பற்றிய கூச்சல்கள் தமிழ் அரசியல் தளத்தில் மீண்டும் ஓங்கி ஒலிக்கிறது. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனையும் பேச்சாளர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனையும் தவிர்த்துவிட்டு, தமிழ்த் தேசியம் பேசும் ஏனைய கட்சிகளின் தலைவர்கள் மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர். அதில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கியது போதும், இனி இந்த விடயத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் கையளியுங்கள் என்று கேட்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்ததில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸூம் கையெழுத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இனப்படுகொலைக்கு எதிரான அமைப்பு ஜெனிவாவில் அனைத்துத் தமிழ்த் தரப்பினரையும் ஒன்றிணைத்து ஒரு மாநாடு நடத்தப்போவதாகவும் அறிவித்திருக்கிறது. அதில் இலங்கையிலிருந்தும் தமிழ்த் தலைவர்கள் முதல் தடவையாகக் கலந்துகொள்வார்கள் என்று வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு ஜெனிவா தொடர்பில் தமிழ் அரசியல் தளம் மீண்டும் சூடாகியுள்ளதன் மூலம் ஏதாவது தீர்வுகள் தமிழர்களுக்குக் கிடைக்குமா என்றால் இல்லை என்பதே பதில். பன்னாட்டு அரசியல் நகர்வுகளின், பூகோள பிராந்திய அரசியல் நலன்களின் களமான மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான நகர்வுகளைக் கையாளும் வல்லமையோ மாற்றியமைக்கும் வல்லமையோ இந்தத் தமிழ்த் தரப்புக்களுக்கு இல்லை என்பதே வெளிப்படையான உண்மை. பன்னாட்டு அரசியலில் தமிழர் விவகாரம் மேற்கு நாடுகளின் நலன்களை மையப்படுத்தி கையாளப்படுகின்றமையைத் தவிர வேறு எதுவும் இதில் இல்லை. அரசியல் கையறு நிலையில் இருக்கும் தமிழ்க் கட்சிகள் ஜெனிவாவை தமது அரசியலுக்குப் பயன்படுத்துவதைத் தவிர பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னேற்றகரமான வேறு எந்த வொரு விடயமும் உடனடியாக நடக்கப்போவதில்லை. பூகோள அரசியல் சூழ்நிலைகள் கனிந்து சாதகமாக வந்தால் தவிர தமிழர் விவகாரம் மனித உரிமைகள் பேரவையில் இறுக்க மடையப் போவதுமில்லை அங்கிருந்து பாதுகாப்புச் சபைக்கு நகரப் போவதுமில்லை என்பது தெளிவு.

தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் இது தெளிவாகத் தெரிந்தபோதும், போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்தும் அவர்கள் ஜெனிவாவை மையப்படுத்திய தமது அரசியல் நாடகத்தை அரங்கேற்றிக்கொண்டே இருக்கிறார்கள். அதனை அவர்கள் கைவிடவேண்டும். ஜெனிவாவில் அழுத்தம் கொடுப்பதன் மூலம் கொழும்பு அரசை இந்த விடயத்தில் சாதகமான திசை நோக்கி நகர்த்த முடியும் என்கிற நம்பிக்கை காலாவதியாக பல ஆண்டுகளாகிவிட்டன. ரணில் - மைத்திரி ஆட்சியிலேயே முடியாமல்போன அதனை ராஜபக்சக்களின் தயவில் பதவியில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி ஜெனிவாவின் ஊடாகக் கிடைக்கும் என்பது தமிழ் அரசியல் தலைவர்களின் ஏமாற்று வேலை என்பதன்றி வேறில்லை. ஜெனிவாவின் மூலம் நீதி கிடைத்தால் அது சிறப்பானதுதான், அதற்காக அதனை மட்டுமே ஒரு தீர்வு நிலையாகக் தொடர்ந்தும் காட்டி அதனை மையப்படுத்திய அரசியலைத் தொடர்வது நல்லதல்ல. மக்களின் எழுச்சி ஒன்றே ஆட்சியாளர்களை விரட்டியடிக்கும் சக்தி என்பது கோட்டாபய விடயத்தில் நிரூபிக்கப்பட்ட பின்னரும் தமிழ் அரசியல் கட்சிகள் ஜெனிவாவில் தொங்கிக் கொண்டிருப்பது அவற்றின் கையாலாகாத்தனம்.

# இலங்கையிலும் விரல் ரேகை மோசடி அறுவைச் சிகிச்சை மூலம் நடக்கிறது



ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதில் தனித்துவமானது என்று கூறப்படும் விரல் அடையாளத்தையே அறுவைச் சிகிச்சை மூலம் மோசடி செய்யும் செயல் இலங்கையில் மேற்கொள்ளப்படுவது அம்பலத்துக்கு வந்துள்ளது. இந்தியாவில் நடந்த இதுபோன்ற மோசடி ஒன்று காவல் துறையினரிடம் பிடிபட்டதைத் தொடர்ந்து இத்தகைய மோசடி இலங்கையிலும் இடம்பெறுவது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

தெலுக்கானா காவல்துறையினரே இந்த மோசடியை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். இது தொடர்பில் இந்தியர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் மருத்துவத்துறை சார்ந்தவர்கள். ஒருவர் மயக்க மருந்து நிபுணராகவும் மற்றொருவர் ரேடியோகிராபராகவும் கடமையாற்றுகின்றனர்.

இவர்களில் ரேடியோகிராபராகக் கடமையாற்றுபவரே விரல் ரேகை சிதைப்பு அறுவைச் சிகிச்சையை செய்யும் முதன்மைச் சந்தேகநபராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். திருப்பதியில் தொழில்பார்த்து வரும் இவர், பள்ளி நண்பர் ஒருவரை நீண்ட நாள்களின் பின்னர் பள்ளி நண்பர் ஒருவரைச் சந்தித்தபோது அவர் தான் இலங்கையில் விரல் ரேகை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதைப் பற்றிக் கூறியுள்ளார்.

அதைத் தொடர்ந்து அதே தொழிலை இந்தியாவிலும் செய்து பணம் பார்ப்பதற்கு இரு சந்தேகநபர்களும் திட்டமிட்டுக் காரியத்தில் இறங்கியுள்ளனர் என்கிறார்கள் காவல்துறையினர். குவைத்தில் பணிபுரிவதற்காகச் செல்லும் இந்தியர்கள் அங்கு நுழைவிசைவு (விசா)அனுமதிக் காலத்தைத் தாண்டியும் சட்டத்துக்குப் புறம்பாக அங்கு தங்கியிருந்து வேலை பார்க்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் குவைத் காவல்துறையினரால் பிடிக்கப்பட்டு நாடு கடத்தப்படுகிறார்கள்.

நாடு கடத்தப்பட்டவர்கள் மீண்டும் குவைத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. அதற்கு முக்கியமான ஆதாரமாக இருப்பது விரல்ரேகை அடையாளம். எனவேதான் அதனை மாற்றுவதன் மூலம் மீண்டும் குவைத்திற்குள் நுழைவதற்கு பலரும் முயற்சிக்கிறார்கள் என்று தெலுங்கானா காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இந்த விரல் ரேவை மாற்று அறுவைச் சிகிச்சைக்கு ஒருவருக்கு 25 ஆயிரம் இந்திய ரூபாய் அறவிடப்பட்டுள்ளது. அவ்வாறு அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட இருவரும் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

## பொது மக்களின்...

வழங்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
அதேநேரம், பொதுமக்கள் அரச அலுவலகங்களைத் தமது தேவைக்காக நாடும்போது அலைபேசி எண், புலன எண் (வட்ஸ்அப்), மின்னஞ்சல் போன்ற விவரங்களை வழங்குமாறும் அமைச்சு கேட்டுள்ளது.
கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் மூலம் தீர்க்கப்படக்கூடிய விடயங்கள் தொடர்பாக அரச நிறுவனங்களை பொதுமக்கள் நேரில் நாடிவர அனுமதிக்காமல் நடைமுறைகளை உரிய முறையில் திறமையாக பின்பற்றுமாறு அரச ஊழியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது அமைச்சு.
பொதுமக்களின் கடிதங்களுக்கு ஒரு வாரத்திற்குள் பதில் கடிதம் வழங்கப்படவேண்டும். முழுமையான பதிலை வழங்க முடியாத நிலை இருப்பின் 4 வாரங்களுக்குள் பதில் வழங்கப்படும் என்று தெரிவிக்கும் இடைக்காலப் பதில் வழங்கப்படவேண்டும்.
பதில் கடிதம் அனுப்பப்படும்போது, அந்த விடயதானத்தைக் கையாளும் அரச அலுவலரின் தொலைபேசி எண், பக்ஸ் எண், மின் அஞ்சல் முகவரி போன்றவற்றை அதிகாரியின் கையெழுத்துக்குக் கீழே கட்டாயம் குறிப்பிடவேண்டும்.
பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் மின் அஞ்சல்கள் ஒவ்வொரு நாளும் பார்வையிடப்படவேண்டும். அதற்கென ஒரு அலுவலர் கட்டாயம் நியமிக்கப்படவேண்டும். அதிகாரிகளுக்கு அனுப்பப்படும் மின் அஞ்சல்களும் ஒவ்வொரு நாளும் பார்வையிடப்படவேண்டும். கிடைக்கப்பெறும் மின்னஞ்சல்களுக்கு அன்றைய தினமே பதிலளிக்கப்படவேண்டும். பதில் வழங்க முடியாத நிலை இருப்பின் எத்தனை நாட்களுக்குள் பதில் வழங்கப்படும் என்பதைக் குறிப்பிட்டு இடைக்காலப் பதில் வழங்கப்படவேண்டும். குறிப்பிடப்படும் கால எல்லைக்குள் முழுமையான பதில் வழங்கப்படவேண்டும்.
அரச அலுவலகங்களுக்கு வரும் அனைத்து அழைப்புகளுக்கும் பதிலளிக்கப்படவேண்டும். அதிக அழைப்புகள் கிடைக்கும் அலுவலகங்களில் அதற்கென அலுவலர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும்.
உள்வரும் அழைப்புக்கள் அனைத்தையும் பதிவு செய்வதற்கு அலுவலர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும். அழைத்தவரின் பெயர், விடயதானம், தொடர்பு எண் என்பவற்றைப் பதிவு செய்வது கட்டாயமானது என்பதை அந்த அலுவலர் உணர்ந்திருக்கவேண்டும்.
அந்த அழைப்புக்கள் தொடர்பில் உடனடியாகப் பதில் வழங்க முடியாத நிலை இருப்பின் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பதிலளிப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரி கட்டாயம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
இப்படி அமைச்சின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## பட்ஜெட்...

புதிய இடைக்கால நிதி நிலை அறிக்கையை ஆவணி 30ஆம் நாள் நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். நாட்டின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் வரிகள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் கடுமையாக அதிகரிக்கப்பட்டுள்ளன.
2021 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 110 சதவீதமாக இருந்த பொதுத்துறைக் கடனை நடுத்தர காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100 சதவீதத்திற்கு மிகாமல் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றார்.
சர்வதேச நாணய நிதியத்தின் வருகையுடன், அரசியல்வாதிகள் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் (SOEs) மறுசீரமைப்பு மற்றும் அரசாங்க நிறுவனங்களில் அரசியல் நியமனங்களுக்கு எதிராக ஆதரவளிக்கத் தொடங்கியுள்ளனர்.
முன்னதாக இந்த நிதி நிலை அறிக்கை வாக்கெடுப்பில் இருந்து விலகி இருக்கப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்தது. அதைத் தொடர்ந்து பொது ஜன பெரமுனவிலிருந்து பிளவுண்ட பிரிவினர் தாமும் வாக்கெடுப்பில் இருந்து விலகி இருப்பதாக அறிவித்தனர்.
இந்த இடைக்கால நிதி நிலை அறிக்கை இலங்கைக்குப் பாதகமான பல அம்சங்களைக் கொண்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். பன்னாட்டு நாணய நிதியத்துடன் ஆட்சியாளர்கள் நடத்தி வரும் பேச்சுக்களைக் குழப்பும் எண்ணம் தமக்கு இல்லை என்றாலும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையைத் தக்கவைவப்பதற்கு விரும்புகின்றனர் என்றார் அவர்.
அத்தோடு, இடைக்கால நிதி நிலை அறிக்கை தொடர்பில் உரையாற்றுவதற்கு பொது ஜன பெரமுனவிலிருந்து பிரிந்த 13 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாய்பளிக்கப்படாததையும் சுட்டிக்காட்டிய அவர், இவற்றின் காரணமாக நிதி நிலை அறிக்கையிலிந்து விலகி இருக்கத் தீர்மானித்ததாகத் தெரிவித்தார்.
நிதி நிலை அறிக்கையை எதிர்க் கட்சிகள் ஆதரிக்க மறுத்திருப்பதைத் தொடர்ந்து அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அனைத்துக் கட்சி ஆட்சிக்கான அழைப்பை அவை நிராகரித்திருப்பது தெளிவரகிறது என்று அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். அனைத்துக் கட்சீ அரசை அமைப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும் என்று இடைக்கால நிதி நிலை அறிக்கையின் மீதான தனது உரையின்போதும் ரணில் வலியுறுத்தியிருந்தார்.

---

## சனி...

றும் வெள்ளிக் கிழமைகளில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், சனி ஞாயிறு தினங்களில் குறைந்த நேர மின்வெட்டு இருக்கும் என்று பொதுப் பயன்பாட்டுகள் ஆணைக்குழுவின் தலைவர் யானக ரட்ணாயக்க தெரிவித்தார்.
சனி, ஞாயிறு தினங்களில் இரவு ஒரு மணி நேரமும் திங்கட்கிழமை பகல் மற்றும் இரவு நேரங்களில் தலா ஒரு மணி நேரமும் மின்வெட்டு நடைமுறையில் இருக் கும்.

## லிட்ரோ...

படும் என்றும் அவர் தெரிவித்தார்.
பன்னாட்டுச் சந்தையில் எல்.பி. சமையல் எரிவாயுவின் விலை குறைந்துள்ளதைத் தொடர்ந்து இலங்கையிலும் அதன் விலை குறைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# பெறுபேறு எனும் போதை ஏன்...?

பிருந்தா



உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியிருக்கின்றன. தமது சகோதரிகள், சகோதரர்கள், உறவுக்காரப் பிள்ளைகள் அதில் தேறியிருப்பதையும், மாணவ, மாணவிகள் தேறியிருப்பதையும் பலரும் பகிரங்கப்படுத்தி வருகிறார்கள். பொதுவெளிகளிலும், சமூக வலைத்தளங்களிலும் இந்தக் காலகட்டத்தில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளே கொடிகட்டிப் பறக்கின்றன. முகநூலில் இதைப் பகிரங்கப்படுத்துவது அதிகரித்திருக்கிறது. தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் தமது மாணவர்களின் பெறுபேற்றைப் பெருமையுடன் வெளிப்படுத்துகின்றனர். இவ்வாறு பகிரங்கப்படுத்தப்படுகின்ற பெறுபேறுகள் திறமைச் சித்திகளாக மாத்திரமே இருக்கின்றன. அதிக புள்ளிகள் பெற்றவர்களைப் பொதுவெளியில் கொண்டாடும் நிலையாக இது இருக்கிறது. குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்கள் ஓரங்கட்டப்பட்டிருக்கிறார்கள்.

கொண்டாட்டத்தின் வீரியத்தாலும், பெறுபேறுகள் குறித்துச் சமூகம் கட்டி வைத்திருக்கின்ற பெருங்கோட்டையாலும் பல பிள்ளைகள் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.இந்தப் பெறுபேற்றைக் கொண்டாடித் தீர்க்கும் போதைக்குள் இதுபோல பல பாதகங்கள் இருக்கின்றன.

**கல்வித் திட்டக் குறைபாடு**

இலங்கை அரசின் கல்வித் திட்டத்தில் பல குறைபாடுகள் காணப்படுவது பற்றிய கருத்துருவாக்கங்கள் காலம் காலமாக இருந்து வருகின்றன. பிள்ளைகளின் ஆளுமை மற்றும் அவர்களின் திறமைக்கு ஏற்ப எதிர்காலத்தில் அவர்களை வழிப்படுத்துவதற்கு இந்தக் கல்வித் திட்டம் ஏற்றதாக இல்லை என்கிற பலமான விமர்சனம் தொடர்ந்து இருக்கிறது. அனைவருக்கும் ஒரே பாடத்தைப் போதித்து வடிகட்டும் இந்த நடைமுறைக் கல்வி குறித்து கல்விப் புலத்தினரோ, ஆசிரிய, அதிபர் மற்றும் கல்விப் பிரிவினரோ இதுவரை அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக இந்தத் தரப்பினர் மத்தியில் குறித்த கல்வித் திட்டத்தை மாணவர்களின் போட்டிக் களமாக்கும் சிந்தனையே ஊறியிருக்கிறது.

தென்னிந்தியத் திரைப்படமான நண்பன் படத்தில் கல்லூரி ஆசானான சத்யராஜ் கதாபாத்திரம் சொல்வதுபோல, "இது ரேஸ்... ஓடிக் கொண்டேயிருக்கனும்..." என்பதற்கிணங்க மாணவர்களை ஓட்டப்பந்தயக் குதிரைகளாக்கி விட்டிருக்கிறார்கள். குறைபாடுகள் நிறைந்த கல்வித்திட்டத்தில் மாணவர்களை ஓட்டப்பந்தயக் குதிரைகளாக்கிவிட்டு அதன்மூலம் கிடைக்கின்ற பரீட்சைப் பெறுபேறுகளைக் கொண்டாடிக் குதூகலித்துச் சிற்றின்பம் காண்பதாக இருக்கிறது நிலை.

**கல்வி பற்றிய கரிசனையாலும், மாணவர்களை நல்வழிப் படுத்த முடியாமையாலும் பிறழ்வான நடத்தையுடைய மனிதர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்**

**சமூகத்துக்கும், வாழ்க்கைக்கும் உதவாத கல்வி**

கல்வி பற்றிய கரிசனையாலும், மாணவர்களை நல்வழிப்படுத்த முடியாமையாலும் பிறழ்வான நடத்தையுடைய மனிதர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதற்குச் சிறந்த உதாரணமாக, அண்மைய காலத்தில் நிலவிய எரிபொருள் நெருக்கடியின்போது வவுனியாவில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் ஆசிரியை ஒருவர் தனக்கு எரிபொருள் கிடைக்காமல் ஆதங்கப்பட்ட விடயத்தைக் குறிப்பிடலாம். எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்று எரிபொருளுக்காக நாட் கணக்கில் காத்திருந்து, அதற்குரிய டோக்கனைப் பெற்றும்கூடத் தனக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை என்றும் ஆசிரியையான தன்னை எரிபொருள் பெற விடாமல் அங்குள்ளவர்கள் கிண்டலும் கேலியும் செய்து நடந்துகொள்ளும் விதம் கண்டிக்கத்தக்கது என்றும் தனது ஆதங்கங்கங்களை வெளிப்படுத்தினார்.

அத்தோடு தான் பாடசாலைக்குச் சென்றால்தான் உங்களின் பிள்ளைகள் கற்பார்கள், அவ்வாறு செல்லாவிடின்

பிள்ளைகளின் கல்வி பாழ் என்றும் சொன்னார்.

அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நின்று குறித்த ஆசிரியைக்கு இடையூறுகளை ஏற்படுத்தியவர்களில் பலர் பாடசாலைக் கல்வியைப் பெற்றவர்களாகவே இருப்பார்கள். பாடசாலைக் கல்வியைப் பெற்ற இந்தச் சமூகத்தின் செயல்களில் பல கீழ்மைகளே நிறைந்திருக்கின்றன. காரணம் பாடசாலைக் கல்வி என்பது பரீட்சையை நோக்கிய ஓர் ஓட்டப்பந்தயமாக இருக்கிறதே தவிர அது வாழ்க்கையைச் செம்மையாக வாழும் வழியைக் கற்க வழிசெய்வதில்லை. பாடசாலைக் கல்வியைப் பெற்ற பலருள்ள சமூகத்தில் சீரழிவுகளும், கீழ்மைகளும் நிறைந்தே கிடக்கின்றன. படித்த வர்க்கம் என்று சொல்லப்படுகிற ஆசிரிய, கல்வியியலாளர்களின் வட்டத்தில்கூட சாதி, தீண்டாமை, மற்றவர்களைப் புண்படுத்தாமல் நடந்துகொள்ளத் தெரியாமை, மற்றவர்களுக்குப் பாதிப்புக் கொடுக்காதவாறு தமது காரியங்களை ஆற்ற முடியாமை ஆகிய பல குறைபாடுகள் நீள்கின்றன.

வாழ்க்கைக்கு உதவாத இங்குள்ள கல்வியையும், கல்வித் திட்டத்தையும் பற்றிப் பிடித்துக்கொண்டு அதன் மூலம் கிடைக்கின்ற பரீட்சைப் பெறுபேறுகளைக் கொண்டாடுவது என்பது எத்தகு ஆரோக்கியமானது என்பது சிந்திக்கவேண்டிய விடயம். அவ்வாறில்லாமல் கல்வியையும், கல்வித் திட்டத்தையும் மாற்றியமைத்து பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைக்கு ஏற்பவும் ஆற்றலுக்கு ஏற்பவும் சிந்தனைகளைப் புகுத்தி, அவற்றை மேபடுத்த - வலுப்படுத்தக் கூடிய கல்வி மற்றும் இதர முறைகளைக் கண்டறிந்து செயற்படுத்துவதே ஆரோக்கியமான சந்ததியை - எதிர்காலத்தை உருவாக்கும். அப்போதுகூட அதைக் கொண்டாடித் தீர்த்தல் என்பது ஆரோக்கியமற்றதாகவே இருக்கும்.

புகழைக் கொண்டாடுவதற்குக் முக்கியத்தும் கொடுப்பதை விடத் தமது குறைபாடுகளைத் திருத்திக் கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கே மனிதர்கள் பழக்கப்பட்டுக் கொள்ள வேண்டிய முக்கிய பண்பு. காலத்தின் தேவையும் அதுவே. குறைகளே இங்கு அதிகரித்துக் கிடக்கின்றன. சீர் செய்ய வேண்டியதும் கவனத்தில் கொள்ளவேண்டியதும் குறைகளேயன்றி நிறைகளை அல்ல.

# தேவையற்றுப்போனதா கூட்டுக் குடும்ப வாழ்வு...?

**விருத்தாசலம்**



கூட்டுக் குடும்பம் என்பது தமிழர் மத்தியில் இருந்த ஒரு வாழ்க்கை முறையாகும். எல்லோருமாகச் சேர்ந்திருந்தால் மட்டுமே வாழ முடியும் என்ற நிலை முன்னைய காலங்களில் இருந்தது. இப்போது வழக்கொழிந்து போய்விட்டது கூட்டுக் குடும்ப வாழ்வியல். அதன் தேவையும், பயனும் அந்தக் காலத்தில் வாழ்க்கை சிறக்க வழி சமைத்தன. சமூகத்துக்குப் பாரமாகவும், தனிநபர் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகவும் இருக்கிறது என்;று எண்ணப்படுவதால் கூட்டுக்குடும்பம் என்கிற கட்டமைப்புக் காணாமல்போய்க்கொண்டிருக்கிறது.

**கூட்டுக்குடும்பப் பலம்**

வீட்டுக் கூரை மேய்தல், வயல் விதைத்தல், தோட்ட வேலைகள், வேலி அடைத்தல், கிணறு இறைத்தல், கொண்டாட்டங்களின் போதான வேலைகளைப் பகிர்ந்து செய்தல், சுக துக்கங்களைப் பகிர்தல் எனக் கூட்டுக்குடும்பத்தின் தேவை முன்னைய காலத்தில் அதிகம் இருந்தது. உதாரணத்துக்கு, வீடு மேய்வதாயின் குடும்பத்திலுள்ள அனைவரும் இணைந்து இலகுவாக அதைச் செய்து முடிப்பர். ஏனைய வேலைகளிலும் ஆளாளுக்கு உதவி ஒத்தாசையாக இருப்பர். இதனால் கூட்டுக்குடும்பம் என்ற எண்ணக்கரு அப்போது வலுப்பட்டது. இந்தியத் தமிழர் மத்தியில் மிக நீண்ட காலமாக கூட்டுக் குடும்ப வாழ்வு நிலைத்திருந்ததற்கு முக்கிய காரணம் அவர்களின் பாதுகாப்புடன் அது தொடர்புபட்டிருந்தமையே.

இனக்குழுக்கள் தமது பாதுகாப்பு, விவசாயம், கால்நடை வளர்ப்புப்போன்ற வாழ்வாதாரத் தேவைகளில் தங்கியிருந்ததால் இந்தக் கூட்டுக்குடும்பம் அவசியப்பட்டது. கிராமத்துக்குள் புகுந்து அங்குள்ள செல்வங்களையும், மந்தைகளையும், இளம்பெண்களையும் சூறையாடிச் செல்லும் வழக்கம் இனக்குழுக்கள் மத்தியில் இருந்தது. இதைத் தடுப்பதற்கு அந்த ஊரிலுள்ளவர்கள் ஒன்றுகூடி விழிப்புடன் இருக்கவேண்டியிருந்தது. குறிப்பாகத் தாய் மாமன் தனது சகோதரியின் பெண் பிள்ளைகளைப் பாதுகாக்கின்ற பொறுப்பில் இருந்தார். பின்னர் அதுவே காதல், திருமணம், சடங்குகள் என மாறியது.

சொத்துகள், பெறுமதியான பொருள்கள் எல்லாம் கிராமத் தலைவரின் வீட்டிலேயே பாதுகாக்கப்பட்டன.




# சுரண்டும் அட்டை மோசடி

இன்று அலைபேசியில்தான் (மொபைல்) பெரும்பான்மை பணப் பரிவர்த்தனைகளைச் செய்கிறோம். 'போன் பே', 'கூகுள் பே', 'பே டிஎம்' என எண்ணற்ற பணப் பரிமாற்றச் செயலிகள் இதற்கு உதவுகின்றன. இவை ஒரு தொழில்நுட்ப வரம்.

வெளியில் செல்லும்போது நமது பணப் பையை எடுத்துச்செல்ல வேண்டியது இல்லை. அது தொலைந்துபோகும், பிக் பாக்கெட் களவுபோகும் என்றெல்லாம் அஞ்சத் தேவை இல்லை. பணத்திற்காக ஏடிஎம் மையங்களில் கால் கடுக்க நிற்கத் தேவை இல்லை. ஒரு ரூபாய் என்றாலும் லட்சம் என்றாலும் ஒரே அழுத்தில் பணம் கைமாறிவிடும். ஒருவேளை, கைபேசி தொலைந்துபோனால்கூட அதை வைத்து நமது சேமிப்பைக் களவாட முடியாது. எல்லாம் சரிதான். ஆனால், இதுபோல பல விதங்களில் உதவியாக இருக்கும் இச்செயலிகளைக் குறிவைத்தும் மோசடிகள் அரங்கேறுகின்றனவே, என்ன செய்வது?

நாம் ஏமாறுவதற்கு அனைத்து வாய்ப்புகளும் இருக்கும் மிக முக்கியமான மோசடி, 'சுரண்டும் அட்டை' (Scratch Card) மோசடி. இந்த வகைச் செயலிகளில் ஒவ்வொரு முறை பணப் பரிவர்த்தனை செய்யும்போதும் போனஸ் அல்லது ரிவார்ட்ஸ் என்ற பெயரில் கணிசமான தொகையை (கேஷ் பேக் - Cash Back) திரும்ப நமக்குத் தருவார்கள். ஒரு நீல நிற அட்டை வடிவில் கிடைக்கும் இதைத் தேய்த்தால் நமது கேஷ் பேக் தொகை எவ்வளவு எனத் தெரியும். பெரும்பான்மையாக இதில் ஒன்றும் கிடைக்காது. அதிர்ஷ்ட தேவதை நம் பக்கம் இருந்தால் ஐந்து ரூபாய் கிடைக்கலாம்.

நீங்கள் அண்மையில் வாங்கிய பொருளுக்கான கேஷ் பேக்கைப் பெற்றிட கீழ்கண்ட கூகுள் பே இணைப்பை க்ளிக் செய்யவும் என நண்பருக்கு வாட்ஸப்பில் ஒரு செய்தி வந்திருக்கிறது. நண்பர் அதை க்ளிக் செய்ய அது கூகுள் பே போலவே வடிவமைக்கப்பட்ட ஒரு தளத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறது. அங்கு இவருக்காக நீல நிற அட்டை காத்திருக்க, அட இது தெரியாதா என அதைச் சுரண்டியிருக்கிறார். ரூ.1,756 உங்களுக்கு கேஷ் பேக் கிடைத்திருக்கிறது என அதில் வரவும், மகிழ்ச்சியில் துள்ளி குதித்து, இதைப் பெற்றுக்கொள்ள இங்கு க்ளிக் செய்யவும் என இருந்ததை அழுத்தியிருக்கிறார்.

அது கூகுள் பே செயலிக்கு அழைத்துச் சென்று, பணப் பரிவர்த்தனை வெற்றிகரமாக நிகழ்த்துவதற்கான ஆறிலக்க பின் எண்ணை இடச் சொல்லியிருக்கிறது. அது தந்ததும், இவருக்கு ரூ.1,756 வருவதற்கு பதிலாக, இவரிடம் இருந்து அத்தொகை இன்னொருவர் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. பிறரது போன் எண்ணோ, வங்கி கணக்கோ, 'க்யூஆர்' (QR) குறியீடோ எதுவுமே

கிராமத் தலைவர் பண்ணையார் நாட்டாமை என குடும்பத் தலைவர் பேசப்பட்டார். ஒரு தலைவர் வயதாகி இறப்பதற்கு முன்னர் அடுத்த தலைவரைத் தெரிவுசெய்யும் வழக்கமும் இருந்தது. திருமணங்கள் சொந்தத்துக்குள்ளேயே நடந்ததற்கு குடும்ப சொத்துகள் வேறு நபர்களிடம் கைமாறாது இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

குழந்தைப்பேறு, குழற்தை வளர்ப்பு விடயங்களிலும் கூட்டுக் குடும்பப் பெண்கள் அதிக அக்கறை செலுத்துவர். குழந்தையின் தாய் வீட்டுக்கு வெளியே செல்லும்போது குழந்தை பாலுக்கு அழுதால் அந்தக் குடும்பத்தில் தாயின் சகோதரியோ, மச்சாள் அல்லது வேறு உறவுகளில் பாலூட்டும் நிலையிலுள்ள குடும்பப் பெண்கள் அந்தக் குழந்தைக்குப் பாலூட்டும் வழக்கம் இருந்தது. அதேவேளை திருமணங்களின்போது சாதி மாறித் திருமணம் செய்யாதிருக்கவும் கூட்டுக்குடும்பங்கள் வழிவகுத்தன.

### பாரமாகிப்போன கூட்டுக்குடும்பம்

இயந்திரங்கள் இல்லாத காலம் என்பதால் எந்தவொரு வேலைக்கும் அதிக மனித வலு தேவைப்பட்ட அந்தக் காலத்தில் கூட்டுக்குடும்பம் நல்ல தீர்வளித்தது. ஒன்றாய் வாழ்தல் இணைந்து செயற்படு தல் என்பன அவசியமாயிற்று. ஆனால் கூட்டுக்குடும்பத்துக்கிருந்த அவசியத்தைத் தற்போது நவீன வாழ்க்கை முறை இல்லாது செய்திருக்கிறது. இயந்திர சாதனங்களின் வருகை மனித வலுவின் தேவையைக் குறைத்திருக்கிறது. பாதுகாப்பு, உழைப்புப் போன்ற முக்கிய விடயங்களில்கூட மனிதர்கள் தனித்தியங்கும் நிலையிருக்கிறது. எதிரிகளிடமிருந்து கூட்டமாகத் தம்மைப் பாதுகாக்கும் தேவையும் இல்லாது போய்விட்டது. இதனால் கூட்டுக் குடும்பம் என்பது இன்றைய சூழலில் பாரமாகவும், படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கு மான முரண்பாடாகவும் ஆகிவிட்டது. அருகி வருகிறது.

தராமல் எப்படி இந்த பணம் இவரது கணக்கில் இருந்து பறிபோனது என நண்பருக்கு உறக்கமே வரவில்லை.

**இந்த மோசடி எப்படி நிகழ்கிறது?**

மொபைல் பணப் பரிமாற்ற செயலிகளில் 'யுபிஐ ஐடி' (UPI ID) அல்லது 'விபிஏ' (VPA) என்று அழைக்கப்படும் மெய்நிகர் பணப் பரிமாற்ற முகவரி ஒவ்வொரு பயனருக்கும் வழங்கப்படும். உங்களது பெயர் அதன் பிறகு உங்கள் வங்கியைக் குறித்து உருவாக்கப்படும் உங்களது தனிப்பட்ட முகவரி இது. நமது அலைபேசி எண்ணோ அல்லது இந்தப் பரிமாற்ற முகவரியைத் தந்தால்தான் நம்மால் பணத்தைப் பெற முடியும்.




ஆனால், விற்பனையாளர்களுக்கு இந்த விவரங்களை ஓர் இணைப்பாக அனுப்பும் வசதியை 'ரேஸர்பே' (RAZORPAY), 'இன்ஸ்டா மோஜோ' (INSTAMOJO) போன்ற தளங்கள் தருகின்றன. ஒன்லைன் பணப் பரிவர்த்தனைகளை எளிமையாக நிர்வகித்துத் தருவதுதான் இத்தளங்களின் வணிகம். ஒன்லைனில் பொருட்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்களுக்காக அவர்களது கணக்கிற்கு நேரடியாகப் பணம் வருவதற்காக, அவர்களது வங்கி விவரங்களைப் பிறரிடத்தில் பகிரக்கூடிய ஒரு இணைப்பாக (பேமென்ட் லின்க் - Payment Link) இவர்கள் உருவாக்கித் தருகிறார்கள்.

வாடிக்கையாளர் ஏதேனும் பொருளை வாங்க நினைத்தால் அதற்கு கீழே இருக்கும் இந்த இணைப்பைக் கிளிக் செய்தால்போதும், அவரது அலைபேசியில் இருக்கும் பணப் பரிவர்த்தனைச் செயலி மூலம் நேரடியாக பின் எண் தரும், பிறகு இறுதிக் கட்டத்திற்கு எடுத்துச் சென்றுவிடும். வாடிக்கையாளர் பின் எண் மட்டும் தந்தால் போதும், பரிவர்த்தனை வெற்றிகரமாக நிகழ்ந்து பொருள் ஆர்டர் செய்யப்பட்டு விடும்.

இந்த சேவையைத்தான் மோசடியாளர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தங்களது 'யுபிஐ' (UPI) செயலிகளுக்கான இணைப்பை இங்கு உருவாக்கி, அதை நேரடியாக அனுப்பாமல், கேஷ் பேக் சலுகை என ஒரு தளத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். பணப் பரிவர்த்தனைச் செயலிகளில் இருப்பது போலவே போனஸ் அட்டையைப் போலியாக உருவாக்கி, அதை சுரண்டியதும் ஒரு கணிசமான தொகை வருவதுபோல அனிமேஷன் செய்கிறார்கள்.

விஷயம் இதற்குப் பிறகுதான் நிகழ்கிறது. இந்தத் தொகை வேண்டுமெனில் இங்கு கிளிக் செய்யுங்கள் எனப் பட்டியைக் காட்டுகிறார்கள் அல்லவா, அதனுள் ஹைப்பர்லிங்க் எனப்படும் பின்னணி இணைப்பாக, தாங்கள் உருவாக்கிய பணப் பரிமாற்ற இணைப்பைச் (பேமென்ட் லிங்க் - Payment Link) செருகிவிடுவார்கள்.

ஆகவேதான், அதைக் க்ளிக் செய்ததும் நேரடியாகப் பின் எண் தரும் இறுதிக் கட்டத்திற்கு அது எடுத்துச் செல்கிறது. அங்கு சற்று சுதாகரிப்பவர்களைக் குழப்புவதற்காக, எதற்காக இந்த பரிவர்த்தனை என குறிக்கும் (ரிமார்ஸ் அல்லது நோட்ஸ் - Remarks or Note ) பகுதியில், உங்களுக்கான கேஷ் பேக் இது என எழுதிவிடுவார்கள். இங்கு உணவு, வாடகை, எரிபொருள் என என்ன வேண்டுமானாலும் எழுதலாம்.




இந்தத் தொகை வேண்டுமெனில் இங்கு கிளிக் செய்யுங்கள் எனப் பட்டியைக் காட்டுகிறார்கள் அல்லவா, அதனுள் ஹைப்பர்லிங்க் எனப்படும் பின்னணி இணைப்பாக, தாங்கள் உருவாக்கிய பணப் பரிமாற்ற இணைப்பைச் (பேமென்ட் லிங்க் - Payment Link) செருகிவிடுவார்கள்

உங்களுக்கான கேஷ் பேக் என ஒரு அட்டையைச் சுரண்ட வைத்து அதில் ஒரு தொகையைக் காட்டி, இணைப்பைக் க்ளிக் செய்ய வைத்து, அங்கும் இது கேஷ் பேக் எனக் குறிப்பில் எழுதியிருப்பதால் எவ்வித சந்தேகமும் இன்றி நாம் நமது பின் எண்ணைத் தந்து பணத்தை இழந்து விடுகிறோம்.

**இந்த மோசடிக்கு ஆளாகாமல் கவனமாக இருப்பது எப்படி?**


அலைபேசிப் பணப் பரிவர்த்தனைச் செயலிகளில் நாம் பணம் அனுப்புவதற்குத்தான் ஆறிலக்க பின் எண் தர வேண்டுமே தவிர, பணம் பெறுவதற்கு எதுவும் தரத் தேவையில்லை. ஆகவே, பின் எண்ணை அழுத்தினால் நாம் பணம் வெளியில்

போகும் என்பதை நீங்கள் நிச்சயமாக நினைவில் வைத்துக்கொள்ளவேண் டும்.

இந்தச் செயலிகளைத் தவிர வேறெங்கும் உங்களுக்குப் பரிசுகள், பணத் திருப்பல்கள் கிடைக்காது. ஆகவே வாட்ஸப், இன்ஸ்ட்டா என வெளியில் இருந்து பரிசு, பாராட்டு, நம்பிக்கை, உங்கள் நல்ல மனசுக்கு இது தருகிறோம் என எது வந்தாலும் அது போலிதான். பதிலே அனுப்பாதீர்கள், பகிரும் எதையும் க்ளிக்கும் செய்யாதீர்கள்.

அப்படியே இணைப்பை க்ளிக் செய்தாலும் அது அழைத்துச் செல்லும் தளத்தை ஒரு நொடியாவது கவனியுங்கள். அதன் இணைய முகவரி ஏன் நீளமாக 'எக்ஸ்ஒய்ஸெட்', 'ஏபிசி' (xyz, abc) என இத்தனை உடைசல்களுடன் இருக்கிறது. தளத்தின் வடிவமைப்பு ஏன் பயங்கர வண்ணங்களில் ஒரு குறைந்த பட்ஜெட் தெலுங்கு படம்போல தனித்துத் தெரிகிறது. ஏன் தப்பும் தவறுமான ஆங்கிலத்தில் அல்லது தமிழில் எழுத்துகள் இருக்கின்றன என்பனபோல இருந்தால் கவனியுங்கள். 'இங்க என்னவோ தப்பா இருக்கே!' ஒரு சிறிய இடறலை இவை உங்கள் மனதில் ஏற்படுத்தினாலும் பரிவர்த்தனையைக் கைவிட்டுவிடுங்கள்.

அப்புறம் முக்கியமாக போனஸ், பரிசு, லாட்டரி எல்லாம் யாருக்கு கிடைத்தாலும் நமக்குக் கிடைக்காது. அது நமக்கே தெரியும் என்பதால் மோசடிகளில் சிக்காமல் உழைத்துக் கரையேறும் வழியைப் பார்ப்போம்.



# நாவற்பழ ஜாம்







சமையல் சமையல்

நாவல் மரங்கள் பூக்கத் தொடங்கிவிட்டன. அவற்றில் ஆங்காங்கே ஒரு சில காய்த்தும் விட்டன. யாழ்ப்பாணத்தில் நாவல் மரங்களை அதிகமாகக் கொடிகாமம், சாவகச்சேரிப் பகுதிகளில் காணலாம். யாழ்ப்பாண மண்ணில் விளைகின்ற இந்த நாவற் பழங்களின் ருசி தனியானது. இலங்கையில் வேறெங்கும் கிடைக்காத நாவற் பழங்கள் நமது மண்ணில் கிடைத்தாலும் அவற்றை நம்மவர்கள் விரும்பிச் சுவைக்கிறார்களா? தேடி நாடுகிறார்களா? என்றெல்லாம் தேடிப் பார்த்தால் விடை ஏமாற்றத்தையே கொடுக்கும். நாவற் பழங்களின் ருசியோ தனியானது. உடலுக்கு நிறைந்த சில ஊட்டங்களை அளிக்கிறது. அத்தகைய நாவற்பழத்தில் ஜாம் செய்வது எப்படி என்று இந்தமுறை பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

நாவற்பழங்கள் - கால்கிலோ அளவில், சீனி - 100 கிராம் அளவு, உப்பு சிறிதளவு.

**எப்படிச் செய்வது...?**

நன்கு பழுத்த நாவற்பழங்களைத் தெரிந்தெடுத்து அவற்றைக் கழுவிச் சுத்தப் படுத்திக் கொள்ளுங்கள். பின்னர் பாத்திரம் ஒன்றில் ஒரு டம்ளர் நீர் விட்டுக் கொதிக்க வையுங்கள். நீருடன் நாவற் பழங்களைச் சேர்த்துக் கிளறுங்கள். நீர் கொதித்ததும் நாவற்பழங்களை மசித்து அவற்றின் விதைகளை நீக்குங்கள். விதைகளை நீக்கிய பின்னர் சீனி சேருங்கள். நன்றாகக் கலந்து கொள்ளுங்கள். கலந்ததும் சிறிதளவில் உப்புச் சேருங்கள். தொடர்ந்து நீர் வற்றும்வரை கிளறிக்கொண்டேயிருங்கள். நீர் வற்றி நாவற்பழக் கலவை இறுக்கமடைந்து வரும்போது நாவல் நிறம் மாறி இருண்ட நாவலாகும். அந்தப் பதம் வந்ததும் அகப்பையால் கிளறினால் அகப்பை கிளறிய அடையாளம் சிறிது நேரம் வரை மறையாமல் இருக்கும். அந்தப் பதம் வந்ததும் இறக்குங்கள். போத்தலில் அடைத்து வைத்துப் பத்திரப்படுத்துங்கள். கடைகளில் கிடைக்கின்ற நிறம், வாசனை, இரசாயனங்கள் சேர்க்கப்பட்ட பழக்கலவை போலல்ல இப்போது நீங்கள் தயாரித்து வைத்திருக்கின்ற நாவற்பழக் கலவை. இதன் ருசியை அனுபவித்து மகிழுங்கள்.

# நாலடி நதி இசை

எங்கெங்கு பார்க்கினும் நீதானடி
எந்தன் ஏழேழு ஜென்மமும் நீதானடி
மஞ்சத்தில் ஏறினேன் நீதானடி
மயக்கும் வாழ்வதைத் தந்ததும் நீதானடி

பூவிதழ் தந்ததும் நீதானடி
இதழ்ப் புன்னகை புணர்ந்ததும் நீதானடி
புல்லுடல் புதினங்கள் நீதானடி
புதுப் பாவையாய் வந்தவள் நீதானடி

செக்கச் சிவந்தவள் நீதானடி
செங்கமல வதனம் நீதானடி
குக்கூவெனக் கூவும் குயில் நீதானடி
இசை மதுரமாய் வந்ததும் நீதானடி

மாமயில் பொற்சிலை நீதானடி
பொங்கும் திரவியச் சுடர்நிலா நீதானடி
புஸ்பத்தால் சிலையானவள் நீதானடி
புனித பூபாளமிசைப்பதும் நீதானடி

கனிகளின் சுவை ரசம் நீதானடி
எனை அணிந்திட்ட ஆடையும் நீதானடி
எனை அணைத்திட்ட கரமது நீதானடி
எந்த இரவிலும் தலை அணை நீதானடி

இடிமின்னல் பொழுதுகள் நீதானடி
பின்னிரா மழைக் குளிர் நீதானடி
வைகறை எற்பாடு நீதானடி
விடியல் சாமத்து சொப்பனம் நீதானடி


என் இறுதி விண்ணுலகும் நீதானடி
அணுவிலும் சிறுவுயிர் நீதானடி
அனலிலும் பெருஞ்சினம் நீதானடி
அடங்காப் பறவையும் நீதானடி

எனை அடக்கும் சக்தியும் நீதானடி
சாமத்து முத்தமுகில் நீதானடி
நான் சரிகின்ற கடைசி மடி நீதானடி
எனை சூரியனாக்கும் நிலா நீதானடி

ஆயிரங் கருமுகில் மறைத்த போதும்
ஆதவன் ஒளியேனோ மறைவதில்லை
இலட்சம் சூழ்ச்சிகள் பின்னிலும்
நம் காதல் கறையெனக் கருகுவதில்லை

**செல்வகுமார்**

கு.கணேசன்



# ஆண்களுக்கே உண்டான அவதி!

அவர் பணியிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர். கடந்த சில வாரங்களாக சிறுநீர் செல்லும்போது வேகம் குறைகிறது என்பதற்காக என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். வழக்கமான பரிசோதனைகளுக்குப் பிறகு அவருக்கு 'ப்ராஸ்டேட் சுரப்பி' சிறிய அளவில் வீங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மாத்திரை சாப்பிடச் சொன்னேன். சில வாரங்களில் அவருடைய பிரச்சினை சரியாகிவிட்டது.

"ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மீண்டும் என்னிடம் வந்து பரிசோதித்துக்கொள்ளுங்கள்" என்று அப்போது அவரிடம் சொல்லியிருந்தேன். அதை அவர் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இரண்டு வருடங்கள் கழித்து "சிறுநீர் அடைத்துக்கொள்கிறது" என்ற புதுப் பிரச்சினையோடு வந்தார். பரிசோதித்ததில், அவருக்குப் ப்ராஸ்டேட் புற்று நோய் இரண்டாம் கட்டத்தில் இருந்தது. அதற்குப் பிறகு மூன்று வருடங்கள் தொடர்ந்து சிகிச்சை எடுத்த பிறகுதான், அவர் புற்றுநோயின் பிடியிலிருந்து முழுமையாக மீண்டார். அதுவரை பல அவதிகளை அவர் எதிர்கொண்டார்.

அவர் மட்டும் முறையான மறுபரிசோதனைக்கு வந்திருந்தால், புற்றுநோயை தொடக்க கட்டத்திலேயே அறிந்திருக்க முடியும். சிகிச்சையும் மிக எளிதாக அமைந்திருக்கும். அவதிகளும் குறைந்திருக்கும். பொதுவாக, ஒருவருக்கு ஒருமுறை ப்ராஸ்டேட் வீங்கத்தொடங்கிவிட்டது என்றால் அதைத் தொடர்ந்து கண்காணிக்கவேண்டும். அப்போதுதான் அது சாதாரண வீக்கத்துடன் நின்றுவிடுகிறதா, புற்றுநோயாக மாறுகிறதா என்பதைக் கண்டுபிடிக்க முடியும்.

**ப்ராஸ்டேட் சுரப்பி என்பது என்ன?**

அடிவயிற்றில், சிறுநீர்ப் பைக்குக் கீழே, சிறுநீர்க் குழாய் தொடங்கும் இடத்தில், வெளிப்புறத்தில், பேரிக்காய் வடிவத்தில் ஒரு சுரப்பி இருக்கிறது. அதுதான் 'ப்ராஸ்டேட்

சுரப்பி' (Prostate Gland). சிறுநீர்ப் பையின் கழுத்தைச் சுற்றி ப்ராஸ்டேட் இருக்கிறது. பார்ப்பதற்கு ஒரு பெரு நெல்லி அளவில்தான் இருக்கிறது. இதன் நடுவே சிறு நீர்ப் பையிலிருந்து சிறுநீரை வெளியேற்றும் குழாய் செல்கிறது.

இந்தச் சுரப்பி ஆண்களுக்கு மட்டுமே இருக்கிறது. பெண்களுக்கு இல்லை. இதுவே இதற்குரிய தனிச்சிறப்பு! முழுக்க முழுக்க இது ஒரு பாலியல் சுரப்பி. இதில் புர தத்தினால் ஆன ஒரு திரவம் சுரக்கிறது. இது விந்து செல் களுக்கு ஊட்டம் தருகிறது. விந்தணுக்கள் வெளியே றும்போது அதை எடுத்துச்செல்லும் ஊடகமாகவும் உதவுகிறது.

**ப்ராஸ்டேட் வீக்கம்**

ப்ராஸ்டேட் சுரப்பியில் முக்கியமாக இரண்டுவிதப் பிரச்சினைகள் உருவாகின்றன. ஒன்று, ப்ராஸ்டேட் வீக் கம். மற்றொன்று ப்ராஸ்டேட் புற்றுநோய். முடி நரைப் பதைப்போல ப்ராஸ்டேட் வீக்கம் (BPH) என்பதும் முதுமையின் அடையாளம்தான். இது ஏற்பட்டவர்களுக்கு அடிக்கடி சிறுகச் சிறுகச் சிறுநீர் கழியும். அவசரமாகக் கழியவேண்டும்போல் இருக்கும்.

ஆனாலும் சிறுநீர் கழிவது தடைபடும். சிறுநீர் கழித்த பிறகும் இன்னும் கழிக்க வேண்டும்போல் இருக்கும். நாட்பட நாட்பட சொட்டுச் சொட்டாகக் கழி யும். இதைத் தொடக்கத்தில் மாத்திரைகளால் குணப் படுத்தலாம். இயலாவிட்டால் 'TURP' எனும் அறுவை சிகிச்சையில் சரிப்படுத்தலாம்.


**ப்ராஸ்டேட் புற்றுநோய்**

60 வயதைக் கடந்த ஆண்களில் சுமார் 14% பேரு க்கு ப்ராஸ்டேட் புற்றுநோய் ஏற்படுகிறது. அமெரிக்கா வில் நுரையீரல் புற்றுநோய்க்கு அடுத்தபடியாக ப்ராஸ் டேட் புற்றுநோயால் இறப்பவர்கள்தான் அதிகம். நம் நாட்டில் அந்த அளவுக்குப் பாதிப்பு இல்லை. என்றா லும், மேற்குநாட்டு உணவுகளை இப்போது நாமும் சாப்பிடுவதால், இங்கும் ப்ராஸ்டேட் புற்றுநோய் வரு வது அதிகரித்து வருகிறது.

முக்கியமாக, 'ரெட் மீட்' எனப்படும் இறைச்சிதான் இந்தப் புற்றுநோயை அழைத்து வருகின்றது. உடற்பரு மன் உள்ளவர்களுக்கு இது வருவதற்கான வாய்ப்பு இரண்டு மடங்கு அதிகம். வெயிலுக்குச் செல்லாமலும், இடுப்புக்கு எந்தப் பயிற்சியும் தராமலும் இருக்கிற ஆண்கள் கொஞ்சம் எச்சரிக்கையாகவே இருக்கவேண் டும். காரணம், வைட்டமின்-டி குறைவாக உள்ளவர்க ளுக்கு ப்ராஸ்டேட் புற்று அதிகம் வருவதாக ஓர் ஆய்வு கூறுகிறது. மதுவும் புகைபிடித்தலும் இந்த நோய்க்கு வழிகாட்டுகின்றன.

தகாத பாலுறவு வைத்துக்கொள்கிறவர்களுக்கும் இது ஏற்படுவதுண்டு. குடும்பத்தில் யாருக்காவது இது வந்தி ருந்தால், வாரிசுகளுக்கு வர வாய்ப்பிருக்கிறது. வழக்க மாக நம் உடலில் சுரக்கும் என்சைம்கள் நல்லதே செய் யும். ஆனால், PRSS3 என்று ஒரு நொதி இருக்கிறது. இது நமக்கு எதிரியாகிவிடுகிறது. இதன் அளவு குருதியில் அதிகமாக இருந்தால், எறும்புகள் மரத்தைச் சுற்றி மண் புற்றை வளர்ப்பதைப்போல், இது ப்ராஸ்டேட் செல்களைத் தூண்டி புற்றுநோயை வளர்க்கிறது. இந்த நோய்க்கு மரபணுப் பிறழ்வும் (Gene mutation) ஒரு காரணமாகிறது.

**தகாத பாலுறவு வைத்துக்கொள்கிறவர்களுக்கும் இது ஏற்படுவதுண்டு. குடும்பத்தில் யாருக்காவது இது வந்திருந்தால், வாரிசுகளுக்கு வர வாய்ப்பிருக்கிறது**



**அறிகுறிகள் என்ன?**

நடுத்தர வயதைக் கடந்த ஆண்களுக்கு கீழே சொன் னவற்றில் ஏதாவது ஒன்றிரண்டு அறிகுறிகள் இருந்தால், உடனடியாக மருத்துவரைப் பாருங்கள். காரணம், இந்த அறிகுறிகள் சாதாரணமாக ப்ராஸ்டேட் வீங்கும்போதும் (BPH) ஏற்படலாம். புற்றுநோயிலும் காணப்படலாம். உண்மையான காரணத்தை மருத்துவர்தான் அறிய முடியும்.

அடிக்கடி சிறுநீர் போகும். முக்கியமாக, இது இரவில் தொல்லை தரும்.

சிறுநீர் செல்லும்போது வேகம் குறையலாம்.

சிறுநீர் செல்வதற்குச் சிரமப்படலாம்.

சிறுநீர் முழுவதுமாக வெளியேறாமல், மீண்டும் மீண்டும் சிறுநீர் கழிக்கத் தோன்றலாம்.

திடீரென்று மொத்தமே சிறுநீர் கழிக்க முடியாமலும் போகலாம்.

சிலருக்கு சிறுநீர் கழிக்கும்போது கடுமையான எரிச்சல் ஏற்படும். வலி தாங்க முடியாது.

சிறுநீரில் குருதி வெளியேறும். இது ஒரு முக்கியமான அறிகுறி.

பாலுறவின்போது வலியுடன் கூடிய விந்து வெளியேறலாம்.

விரைகளில் வலி உண்டாகலாம். இடுப்பு வலியும் முதுகு வலியும் அடிக்கடி தொல்லை தரலாம். இவற்றை அலட்சியப்படுத்தக் கூடாது.

**என்ன பரிசோதனைகள் உள்ளன?**

நோயாளியின் ஆசனவாயின் வழியே மலக்குடலுக்குள் மருத்துவர் விரலை நுழைத்துப் பார்க்கும் 'விரல் பரிசோதனை'யிலேயே ப்ராஸ்டேட் சுரப்பி சாதாரணமாக இருக்கிறதா, வீங்கி இருக்கிறதா என்பதைச் சொல்லிவிடுவார். ஆனாலும், அந்த வீக்கம் புற்றுநோயைச் சேர்ந்ததா என்று சரியாகக் கணித்துச் சொல்ல மற்ற குருதிப் பரிசோதனைகளும் ஸ்கேன் பரிசோதனைகளும் தேவைப்படும்.

**'பிஎஸ்ஏ' (PSA) பரிசோதனை**

'பிஎஸ்ஏ' என்பது 'ப்ராஸ்டேட் ஸ்பெசிஃபிக் ஆன்டிஜென்' (Prostate Specific Antigen – PSA) என்பதன் சுருக்கம். ப்ராஸ்டேட் செல்கள் சுரக்கிற ஒருவித புரதம் இது. இதன் இயல்பு அளவு 4 நானோ கிராம் / மி.லி. இதற்கு மேல் இந்த அளவு கடந்துவிட்டால், ப்ராஸ்டேட் வீங்கியிருக்கிறது என்று அர்த்தம்.

அதேபோல் 'ஆசிட் / ஆல்கலைன் பாஸ்படேஸ் பரிசோதனையில் அவற்றின் அளவுகள் அதிகரித்தாலும் ப்ராஸ்டேட் வீங்கியிருக்கிறது என்றுதான் அர்த்தப்படுத்திக்கொள்ளவேண்டும். அதேநேரம் இந்த அளவுகள் அதிகரித்தாலே புற்றுநோயாக இருக்கும் என்று முடிவு கட்ட முடியாது. பலருக்கு சாதாரண ப்ராஸ்டேட் அழற்சி (Prostatitis)இருந்தாலும் இந்த அளவுகள் அதிகரிக்கும். அப்போது அதற்குரிய சிகிச்சைகள் தேவைப்படும். 'பிஎஸ்ஏ'' அளவு மிக அதிகம் என்றால் அது புற்றுநோய் சந்தேகத்தை ஏற்படுத்தும்.

இப்போது புதிதாக, இணைய மரபணுக்கள் (Fusion gene) பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. TMPRSS2: ERG இணைய மரபணுக்கள் பயனாளியின் சிறுநீரிலோ, ப்ராஸ்டேட் சுரப்பியிலோ காணப்பட்டால் அது புற்றுநோய் இருப்பதற்கான வாய்ப்பை உறுதி செய்யும்.

**புற்றுநோயை உறுதிசெய்ய**

'பிஎஸ்ஏ' அளவு அதிகமாக இருப்பவர்களுக்கு வயிற்றை அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் எடுத்துப் பார்க்க வேண்டும். இவற்றில் ப்ராஸ்டேட் எந்த அளவுக்கு வீங்கியுள்ளது என்பது தெரியும். அந்த வீக்கம் எந்த அளவுக்குச் சிறுநீர்ப் பையை அடைத்துள்ளது என்பதையும், ஒருமுறை சிறுநீர் கழித்த பின்னர் சிறுநீர்ப் பையில் எவ்வளவு சிறுநீர் தேங்குகிறது என்பதையும் காணலாம். இதை வைத்து நோயின் தீவிரத்தைப் புரிந்துகொள்ளலாம்.

இதிலும் நோயின் பாதிப்பு தீர்மானமாகத் தெரியவில்லை என்றால், எம்.ஆர். ஸ்பெக்ட்ரோஸ்கோப்பி (MR Spectroscopy) எனப்படும் சிறப்புப் பரிசோதனை தேவைப்படும். அத்தோடு சிடி / எம்ஆர்ஐ ஸ்கேன், எலும்பு ஸ்கேன் மூலம் ப்ராஸ்டேட்டின் நிலைமை, புற்றுநோயா, இல்லையா, ஒருவேளை அது புற்றுநோயாக இருந்தால், அது வயிற்றிலும் உடலிலும் எலும்புகளிலும் பரவியிருக்கிறதா எனப் பல விவரங்களைத் தெரிந்துகொள்ள முடியும். அதற்கு ஏற்றபடி சிகிச்சை முறைகளை அமைத்துக்கொள்ள முடியும்.



**திசு ஆய்வு சோதனை**

ப்ராஸ்டேட் புற்றுநோய்க்கு சிகிச்சையை மேற்கொள்வதற்கு முன்பு, 'ட்ரான்ஸ் ரெக்டல் ட்ரூகட் பயாப்சி' (Transrectal trucut biopsy) எனும் திசு ஆய்வு சோதனையைச் செய்யவேண்டும். மலக்குடல் வழியாக ப்ராஸ்டேட்டை அணுகி, அதிலிருந்து சிறு திசுவை எடுத்துப் பரிசோதிக்கும் செயல்முறை இது. இதில் புற்றுநோயின் வகையைத் தெரிந்துகொள்ள முடியும். அதன் உதவியால், இதற்கு எந்த சிகிச்சை எந்த அளவுக்குப் பயன் தரும் என்பதை நோயாளிக்கு முன்னரே தெரிவித்துவிடலாம்.

**சிகிச்சைகள் என்னென்ன?**

**கண்காணிப்பு சிகிச்சை:** மிகவும் வயதானவர்களுக்கு தொடக்கநிலையில் இந்தப் புற்றுநோய் இருந்தால், அதைக் கண்காணித்து வந்தால் மட்டும் போதும். காரணம், இது மிக மெதுவாகவே வளரும் தன்மையுடையது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பிஎஸ்ஏ பரிசோதனை மற்றும் தேவையான தொடர் பரிசோதனைகளை மேற்கொண்டால்போதும். மாறாக, இது வேகமாக வளர்கிறது என்றால் மட்டும் மற்ற சிகிச்சைகளைத் தொடங்கலாம்.

**அறுவை சிகிச்சை:** ப்ராஸ்டேட் சுரப்பியை அறுவை சிகிச்சை செய்து அகற்றப்படும் சிகிச்சை இது. இப்போது

லேப்ராஸ்கோப் முறையிலும், ரோபோடிக் முறையிலும் இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. அதோடு விரைகள் (Testes) இரண்டையும் அகற்றுவதும் உண்டு. காரணம், விரைகளில் சுரக்கும் ஆன்ட்ரோஜென் ஹார்மோன் ப்ராஸ்டேட் சுரப்பியின் புற்று வளர்ச்சிக்கு உணவாகிறது. அதைத் தவிர்க்கவே இந்த சிகிச்சையும் தேவைப்படுகிறது. வயதான காலத்தில் விரைகள் நீக்கப்படுவதால் பெரிய அளவில் பாதிப்பில்லை. பதிலாக, மாற்று ஹார்மோன் மருந்துகளைக் கொடுத்து விடுவார்கள்.

**கதிர்வீச்சு சிகிச்சை:** வெளிக்கதிர் வீச்சு, உள் கதிர் வீச்சு என இரண்டு முறைகளில் இது மேற்கொள்ளப்படுவது நடைமுறை. ‘சைபர் நைஃப்’ (CyberKnife) கருவி மூலம் கதிர்வீச்சு தரப்படுவது நவீனமுறை.

மருந்து சிகிச்சை மற்றும் ஹார்மோன் சிகிச்சை: நோயாளியின் வயது, உடல்தகுதி, புற்றுநோய் நிலைமை ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்த சிகிச்சைகள் கொடுக்கப்படும். மரபணுப் பிறழ்வு உள்ளவர்களுக்கு PARP தடுப்பான் மருந்துகள் (PARP inhibitors) நல்ல பயன் தருகின்றன.

ப்ராஸ்டேட் புற்றுநோய்க்கு எந்த சிகிச்சை கொடுக்கப்பட்டாலும் நோயாளிக்குக் குறைந்தது 3 வருடங்களுக்குத் தொடர் கண்காணிப்பும் பரிசோதனைகளும் தேவைப்படும். அப்போதுதான் இது உடலில் மற்ற இடங்களில் பரவாமல் தடுக்க முடியும்.

# பல தடவைகள் தோற்றுப்போன மடு நோக்கிய படை நடவடிக்கை

**கமலநாதன்**

கப்டன் நிவந்த கொடித்துவக்கு என்பவர் இலங்கைப் படைப்பிரிவின் சிறப்புப் படையணியைச் சேர்ந்தவர். பின்னர் கொமாண்டோப் படையணியில் இணைந்தார். ரணசூர பதக்கங்கள் 13ஐயும், வீர விக்கிரம விபூஷண பதக்கங்களையும் பெற்றார். கிழக்கு மாகாணத்தில் புலிகளுடன் நடந்த தாக்குதல்களில் பங்கேற்ற இவர் மடு மாதா கோவில் பகுதியில் நடந்த தாக்குதல்களிலும் பங்கெடுத்தார். நிவந்த கொடித்துவக்கு வெனச யூரியூப் தளத்தில் தனது அனுபவங்களை இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

நான் புத்தளம் மதுரங்குழியைப் பிறப்பிடமாகக் கொண்டவன். உயர்தரம்



வரை மதுரங்குழி மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றேன். பின்னர் இலங்கைப் படையணியின் சிறப்புப் படைப்பிரிவில் இணைந்து மாதுறு ஓயா படைப் பயிற்சிப் பாசறையில் பயிற்சியை முடித்தேன். பின்னர் கொமாண்டோப் படையணியில் இணைந்து மட்டக்களப்பு - வாகனேரி, திருகோணமலை - சம்பூர் பகுதிகளில் கடமையாற்றினேன். பின்னர் மடுப் பகுதியைக் கைப்பற்றுவதற்கான படை நடைவடிக்கையில் இறக்கப்பட்டேன். மடுப் பகுதியை மீட்கும் போரில் படையினர் பலர் இறந்தனர். மேலும் பலர் கை, கால்களை இழந்து ஊனமுற்றனர். மடுப்பகுதியை மீட்பதற்காக மடுவுக்குத் தெற்காக இருக்கும் பெரிய மடுப் பகுதியை முதலில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டியிருந்தது.

எமக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளின் போது மன நிலையைத் திடப்படுத்திக் கொள்வது, காயப்பட்டால் எவ்வாறு செயற்படுவது, உணவின்றிச் செயற்படுவது போன்றன முக்கியப்படுத்தி வழங்கப்பட்டன.

வவுனியா - மன்னார் முதன்மை வீதியிலிருந்து மடுவுக்குத் திரும்பும் வீதியில் மாதா சிலை ஒன்றிருந்தது. அதற்கருகில் காவல் நிலையம் ஒன்றிருந்தது. நாங்கள் அங்கு சென்றபோது அந்தக் காவல் நிலையத்துக்குப் பொறுப்பாக கருணாரத்ன என்பவர் இருந்தார். நாம் மதிய உணவை உண்ணும்போது கறுப்புப் பொலித்தீனால் அடைக்கப்பட்டிருந்த ஓரிடத்தைக் காட்டி அங்கு அமர்ந்து சாப்பிடுமாறு கூறினார். அங்குபோய் உணவுண்ண தொடங்கிய போது மிக அருகில் நின்று புலிகள் சுட்டார்கள். பொலித்தீனை ஊடறுத்துத் துப்பாக்கிச் சன்னங்கள் சென்றன. எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

பொறுப்பாளர் கருணாரத்னவிடம் இது பற்றிக் கேட்டபோது, "இது அடிக்கடி நடக்கிற சம்பவம்தான்" என்றார். நான் அவரிடம் கூறினேன், "இன்னும் ஒரு வாரம் பொறுத்துக் கொள்ளுங்கள். அதன் பின்னர் நீங்கள் வெடிச்சத்தத்தைக் காது கொடுத்து உன்னிப்பாகத் தூரத்தில் கேட்கவேண்டியிருக்கும்" என்று. அதேபோல் ஒரு வாரத்துக்குள் அங்கு நிலைகொண்டிருந்த புலிகளை விரட்டியடித்தோம்.

## புலிகள் ஆட்லறியை டிராக்டரில் இழுத்துச் சென்று அடித்தார்கள்

அந்தப் பகுதியில் படை நடவடிக்கையில் ஈடுபட்டபோது வேவு பார்ப்பதிலேயே பெரும்பலான கவனத்தைச் செலுத்தினோம். நாம் நிற்கும் பகுதிக்குப் புலிகள் பல முனைகளில் இருந்து ஆட்லறித் தாக்குதல்களை நடத்தினர். எமது

**புலிகள் வழமையாக முன்னேறிச் செல்லும் வழிகளைத் தொடர்ந்து வேவு பார்த்தோம். அவர்கள் ஒரு முதன்மை லைனில் போகும்போது அதற்குச் சமாந்தரமாக 20 மீற்றர், 40 மீற்றர்ர தூரத்தில் வேறு வரிசைகளிலும் செல்வார்கள். படையினர் ஊடுருவுவதைத் தடுக்கும் வியூகமே அது.**

வேவு மூலம் பின்னர் அறிந்தோம், ஒரு ஆட்லறியை வைத்துக்கொண்டு அதை டிராக்டரில் கட்டி இழுத்துச் சென்று பல இடங்களில் நிறுத்தி வைத்து அடித்தார்கள் என்பதை.. இதனால் பல இடங்களில் ஆட்லறிகளை நிறுத்தி வைத்திருப்பதுபோன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருந்தார்கள். ஒரு தடவை அடிக்கும்போது குறைந்தது 5 குண்டுகளையாவது ஏவினார்கள்.

நாம் மடுப்பகுதிக் காட்டுக்குள் பதுங்கியிருந்து அவதானித்தபோது அதிகாலை 5.45 மணியளவில் புலிகள் தமது இரவுக் கடமையை முடித்து வெளியேறினர். பெரிதாகச் சத்தமிட்டுக் கதைக்கும் பழக்கம் அவர்களிடம் இருந்தது. அவர்கள் புறப்பட்டு வரும்போது காட்டில் வழமைக்கு மாறான அமைதி நிலவியது. குரங்குகள், பறவைகள்கூடச் சத்தம் செய்யாதிருந்தன. அதை வைத்து ஏதோ அனர்த்தம் நடக்கவிருப்பதை நான் புரிந்து கொண்டேன்.

நாம் பதுங்கிய இடத்துக்கு அருகில் சிறிய மஞ்சள் நிறத் தகரங்களில் தமிழ் எழுத்துகளும் இலக்கங்களும் எழுதப்பட்டு நடப்பட்டிருந்தன. அந்த இடங்கள் புலிகளின் ஆட்லறி இலக்குகளுக்கான குறியீடுகள் என்று எமக்குத் தெரியும்.

நாம் பதுங்கியிருந்த இடத்துக்கு அருகில் 2 புலிகள் வந்தனர். அவர்களை நாம் சுடவில்லை. அதன் பின்னர் பலர் ஒரு மீற்றர் இடைவெளியில் எம்மைக் கடந்து சென்றார்கள்.

நாங்கள் புலிகளின் பகுதிக்குள் பதுங்கியிருந்து தாக்குதலை நடத்தினால் புலிகள் எம்மைச் சுற்றிவளைத்து அடிப்பார்கள் என்று அவர்களுடனான போர் அனுபவங்களின் மூலம் எனக்குத் தெரியும். எமது அணியில் 8 பேர் இருந்தோம். அதற்கு நான் பொறுப்பாக இருந்தேன்.

கிழக்கு மாகாணப் போர் முடிந்த நிலையில் அதிக படையினர் மடுப்பகுதி நோக்கி நகர்த்தப்பட்டனர். நான் எனது மேலதிகாரிகளிடம் அதிக கிளைமோர்க் குண்டுகள் தேவைப்படுகின்றன என்றேன். எனக்கு உடனடியாக 7 குண்டுகள் தேவைப்பட்டன.

### புலிகளின் நகர்வுகளை அவதானித்தோம்

புலிகள் வழமையாக முன்னேறிச் செல்லும் வழிகளைத் தொடர்ந்து வேவு பார்த்தோம். அவர்கள் ஒரு முதன்மை லைனில் போகும்போது அதற்குச் சமாந்தரமாக 20 மீற்றர், 40 மீற்றர்ர தூரத்தில் வேறு வரிசைகளிலும் செல்வார்கள். படையினர் ஊடுருவுவதைத் தடுக்கும் வியூகமே அது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் தொகையில் குறைவாகவுள்ள நாம் புலிகளுடன் துப்பாக்கிச் சமர்களைச் செய்யமுடியாது. அதனால்தான் அவர்கள் செல்லும் வழித்தடத்தில் அதிக கிளைமோர்களைப் பொருத்தத் திட்டமிட்டேன்.

எல்லாக் கிளைமோர்களையும் எனது திட்டப்படி பொருத்தினேன். கிளைமோர் பொருத்திய இடத்திலிருந்து 30 மீற்றர் தூரத்தில் எமது அணி நிலையெடுத்திருந்தது. காட்டில் அமைதி நிலவியபோது புலிகள் வருகிறார்கள் என்று உணரமுடிந்தது. அன்று இரண்டு புலி உறுப்பினர்கள் எல்.என்.பி. ஆயுதங்களுடன் காதை மூடிய சாக்குத் தொப்பிகளை அணிந்தவாறு வந்தார்கள். அந்த அணியில் 100க்கு மேற்பட்டவர்கள் எம்மைக் கடந்து சென்றனர். பின்னாலும் அதிகம்பேர் வந்தார்கள். தாக்குதலை தொடங்கினோம். நாங்கள் 8 பேரும் இறந்தாலும் அந்தத் தாக்குதலின் மூலம் பெரிய மடுப்பகுதியில் நிலைகொண்டிருந்த 800 வரையான படையினரைக் காப்பாற்ற முடியும் என நம்பினேன்.

### 16 கிளைமோர்களை வெடிக்க வைத்தோம்

300 மீற்றர் தூரத்தை இலக்கு வைத்து 16 கிளைமோர்களைப் பொருத்தியிருந்தோம். அத்தனை கிளைமோர்களையும் வெடிக்க வைக்கும் மின்கலத்திலிருந்து மின்சாரம் வரவில்லை. அதனால் முதல் எத்தனிப்பில் கிளைமோர் வெடிக்கவில்லை. மின்கலத்தில் பொருத்தியிருந்த அமுத்தியை இறுக்கி அடித்தேன். பெரிய சத்தத்துடன் கிளைமோர்கள் வெடித்தன. காடு முழுதும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

புலிகள் கடுமையாகத் தாக்கினார்கள். நாங்கள் மடுப்பகுதியைக் கைப்பற்றும் எண்ணத்துடன் இருந்ததால் எது நடந்தாலும் பரவாயில்லை என்ற மனநிலையில் தாக்கினோம். புலிகளின் தாக்குதலில் நான் அணிந்திருந்த தொப்பி குண்டு பட்டுப் பறந்தது. தலையில் சிறிய காயம் ஏற்பட்டது. எமது அணியிருந்த சேனநாயக்காவுக்கு நெஞ்சில் காயம் ஏற்பட்டுச் சிறிது நேரத்தில் அவர் இறந்தார். 3 தடவைகள் மடுப்பகுதியைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தபோதும் இந்த முறை மடுவைக் கைப்பற்ற முடிந்தது. அது மிகப் பெரிய சாதனையாகும். இந்தத் தாக்குதலில் 130க்கு மேற்பட்ட புலிகளின் சடலங்கள் கைப்பற்றப்பட்டன. எனக்கு ரணசூர பதக்கங்கள் 13உம் வீர விக்கிரம விபூஷண பதக்கங்களும் கிடைத்தன. இவை உயிரைப் பணயம் வைத்துப் பெறப்பட்டவை.



# சொன்னதிலை முழுதும் பிழையிருக்கோ?

கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்கதிலை வாசிசாலைக்குப் போனன். சுதனும் ஒரு பெடியனும் பேப்பரோடை இருந்தாங்கள். என்னைக் கண்டிட்டு "வாங்கோ மாமா" எண்டு எழும்பி எனக்கு இடத்தைத் தந்திட்டு மற்றப் பக்கமாய் இருந்துகொண்டான். "என்ன புதினங்களெண்டு ஒண்டுமில்லை, கடன் கதையும் விலைதலைக் கதையுந்தான்.. என்ன?" எண்டன்.

சுதனோடை இருந்த பெடியன் "இப்ப ஏ.எல். றிசல்ற்ஸ் கதையுஞ் சேந்திட்டுது" எண்டு சிரிச்சான். "நல்ல றிசல்ற் காறற்றை பேட்டியள் இப்பத்தே ரென்சனுகளுக்கு நல்ல மருந்துதான் என்ன?" எண்டு சுதன் கேக்க, நான் ஆளையாள் பாத்து முழிச்சன். ஒண்டுமே விளங்கயில்லை. "அது மாமா நல்ல சிரிப்பாயல்லே இருக்கிறது.. " எண்டு சுதன் சொன்னான்.

"உந்தப் பேட்டி விசயம் ஸ்கொலசிப் பிள்ளையளிட்டையும் நடக்கிறதல்லே, அதுகளும் கனக்கச் சொல்லுறதுகளல்லே?" எண்டு நானும் கவனிச்சதுதான் எண்டமாதிரி சொல்ல ஆமோதிச்சாங்கள். அப்ப சங்கரியரும் முருகேசரும் வந்து இருந்துகொண்டினம். "கதை வலு சீரியஸாய் போகுது போலை கிடக்குது?" எண்டு கேட்டார் முருகேசர்.

"நீங்கள் இல்லாமல் என்னண்டு கதை சீரியசாகும்?" எண்ட என்ரை பதிலுக்கு முருகேசரும் சங்கரியரும் பிலத்தாச் சிரிச்சினம். "அது முருகேஸ் மாமா உந்த றிசல்ற் வந்ததைப் பற்றித்தான் கதைபோகுது" எண்டான் சுதன். "ஓஓஓ! பேப்பர்க்காறருக்கு பறவாயில்லை. இப்ப செய்தியள்.. இனியினி வாழ்த்து விளம்பரங்களும் தாராளமாய் வருமில்லோ?" எண்டார் சங்கரியர்.

"இதுக்குள்ளை கஸ்ரப்பட்டுப் படிச்சது பிள்ளையள். சோதினை எழுதினதும் பிள்ளையள். றிசல்ற்றிலை தங்கடை பேரைக் காட்டிறவையை நினைச்சால் சிரிப்பாயும் கிடக்குது. எரிச்சலாயும் கிடக்குது" எண்டு நிப்பாட்டினார் முருகேசர் ஒரு எதிர்பாப்போடை. "ம்ம்ம்... ம்ம்... எங்கடையாக்கள் குளிர்காயிறதிலை வலு கெட்டிக்காறரல்லே?" எண்டு நான் சொன்னதை சுதனும் பெடியனும் ரசிச்சுச் சிரிச்சாங்கள். ஒரு வெக்கங்கலந்த சிரிப்பு மாதிரியும் கிடந்துது.

"உதிலை ஒரு உள்விசயமும் இருக்காமல்லே? நாலைஞ்சிடத்திலை படிச்சும் திறீ ஏ எடுத்திருக்குதுகளாமல்லே?" எண்டு இழுத்தார் சங்கரியர். "உப்பிடியொரு விதமான கதை ஒரு மட்டத்திலை உலாவுதுதான். ஆனால் வடிவாய் யோசிச்சுப் பாருங்கோவன். அதிலை இருக்கிற அறியாத்தனத்தை. படிச்சது எத்தினை இடமாயிருந்தாலும் சோதினை மண்டபத்திலை இருந்து எழுதினது பிள்ளைதானே! அது தன்ரை தலைக்குள்ள உள்ளதைத்தானே எழுதினது. தலைகொள்ள வேணுமே?" எண்டான் கொஞ்சம் சூடாய்.

"உண்மைதானே தம்பி! அவ்வளத்தையும் ஞாபகம் வைச்சு எழுதுறது சுவமான விசயமோ?" எண்டு ஆமோதிச்சன். "நீங்கள் சொல்லுறது ஒரு பக்கமாயிருக்கிற உண்மைதான். எண்டாலும் கவலைப்படுகிற ஒரு விசயமும் உதுக்குள்ளை இருக்குது எண்டதை மறந்துதான் இருக்கிறம்" எண்டு முருகேசர் நிறுத்தி எல்லாரையும் பாத்தார். "அதென்ன மற்றப் பக்கம்?" எண்டான் பெடியன் திடுக்கிட்டமாதிரி.

"இப்ப மூண்டு ஏ எண்டதுக்கும் அங்காலை றாங் எத்தினை எண்டதல்லே முக்கியமாயிருக்குது. அதுக்காண்டி பிள்ளையளை அங்காலையிஞ்சாலை ஒண்டையும் தெரிஞ்சுகொள்ள விடாமலல்லே படிப்பிக்கிறம். உந்த மெடிசின் என்ரபண்ணின எத்தினை தற்கொலை செய்திருக்கு. கம்பஸ் பெடிபெட்டையள் எத்தினை மோட்டு முடிவுகளை எடுத்திருக்குதுகள்? உதுகளுக்கெல்லாம் காரணம் என்ன?" எண்டு நிப்பாட்டினார் முருகேசர்.

"பட்டம் எடுத்த எத்தினை பேர் சொந்தமாய் முடிவெடுக்கிற திறமையுள்ளவையாய் இருக்கினம்? ஜனாதிபதியும் அமைச்சருகள் சில பேரும் சொன்ன அரசாங்க வேலைக்காறரும் உப்பிடியான படிப்புகள் சோதினையளை பாஸ் பண்ணினவைதானே? அவை சொன்னது பிழையெண்டு கொதிக்கிறவை நிருபிக்க ஏதாலும் வைச்சிருக்கினமோ? செயற்றிறன் இல்லாதவையெண்ட குற்றச்சாட்டை ஆதாரத்தோடை மறுக்கட்டும் பாப்பம்" எண்டு நான் முருகேசருக்கு ஆதரவாய் சொன்னன்.

"ஓஓ! பெரிய இடங்களின்ரை நிலைமை வலு மோசம்தானே?" எண்டார் சங்கரியர். பெடியள் ரண்டு பேரும் வாயே திறக்கேல்லை. "அவசரகால நெருக்கடி நிலையளிலை நிர்வாகங்கள் படுகிறபாடு பாக்கத் தெரியுதல்லே. பாடமாக்கிறது வேறை; செய்யிறது வேறை எண்டதை விளங்கவே முடியாத படிப்பும் பட்டங்களும்" எண்டு கொண்டு எழும்பி வந்திட்டன்.

72



தர்மராசா

# சிறைக்குள்...

## குளிர்பானம் வழங்க முன்வந்த தலைமை ஜெயிலர்

நாங்கள் 30.01.2002 அன்று முற்கூட்டியே உணவு தவிர்ப்புப் போராட்டம் பற்றி எழுத்து மூலம் சிறை நிர்வாகத்துக்கு அறிவித்து விட்டோம். அதனால் சட்டப்படி எம் மீது பிழை கண்டுபிடிக்க முடியாத நிலை தலைமை ஜெயிலருக்கு இருந்தது. இந்தக் கட்டத்தில் நானும் இன்னும் ஒரு சில கைதிகளும் எமது நிலைப்பாட்டை அவருக்கு எடுத்துக்கூறினோம்.

"நீங்கள் நாளைய தினம் மீண்டும் பதவியேற்கவிருக்கும் செய்தி இப்போது நீங்கள் சொல்லித்தான் எங்களுக்குத் தெரியும். ஒரு வாரத்துக்கு முன்பே நீங்கள் இங்கு நிற்பதை நாங்கள் கண்டோம். பதில் கடமையாற்றிய தலைமை ஜெயிலர் குணசேகரம் ஏற்கனவே இங்கிருந்து போய்விட்டார் என்பது எமக்குத் தெரிந்தது. எனவே இதை ஒரு காரணமாக நினைத்து நாம் விடுதலை பெறுவதற்கு எமக்குள்ள உரிமையைக் கைவிடப்போவதில்லை. சிறை நிர்வாகத்துக்குப் பங்கம் ஏற்படாத வகையில் நடந்துகொள்வோம்" என்று தெளிவுபடுத்தினோம்.

"சில கைதிகள் களுத்துறை, பூசாவிலிருந்து ஒரு சில தினங்களுக்கு முன்புதான் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களை விசிற் பார்ப்பதற்கு யாராவது வந்தால் பார்க்க அனுமதியுங்கள். ஆனால் உணவுப் பொருள்களை உள்ளே எடுக்கமாட்டோம். இதைவிட அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்களை எம்மைச் சந்திக்கும்படி கோரிக்கை விடுக்கிறோம். அதற்கான அனுமதியை தாங்கள் அவர்களுக்கு வழங்கவேண்டும்" என்றும் மேலதிகமாகக் கேட்டுக்கொண்டோம்.

"நீங்கள் நிச்சயம் உணவு தவிர்ப்பில் ஈடுபடத்தான் போகிறீர்கள் என்றால் அதை நான் தடுக்கவில்லை. ஆனால் பத்திரிகையாளர்களை உள்ளே அனுமதிக்க முடியாது" என்று தலைமை ஜெயிலர் கூறினார்.

"எங்கள் முடிவைத் தெரிவித்துவிட்டோம். நீங்கள் உங்கள் அதிகாரத்துக்குட்பட்டுச் செயற்படுங்கள்" என்று நாம் சொன்னோம். தலைமை ஜெயிலருக்குப் பூரண திருப்தியற்ற நிலையில் நாம் அவரது அறையைவிட்டு வெளியேறினோம். அவரைத் திருப்திப்படுத்துவதற்காக எமது விடுதலைக்கான ஒரு நடவடிக்கையைக் கைவிட நாம் தயாராக இல்லை.

அன்று பிற்பகல் 12.30 மணியளவில் எங்களில் 4 பேரின் பெயர்களைக் குறிப்பிட்டுத் தன்னைச் சந்திக்கு மாறு தலைமை ஜெயிலர் ஸ்கந்தராஜா சிறைச்சாலை ஊழியர் மூலம் அறிவித்தார். நாம் அங்கு சென்றபோது, "உண்ணவு தவிர்ப்பில் ஈடுபடுங்கள், பரவாயில்லை, நிர்வாகத்துக்கு இடையூறாக நடந்துகொள்ளக்கூடாது. உணவு தவிர்ப்பை முடிக்கும்போது என்ன பானம் குடிக்கப்போகிறீர்கள்" என்று சிரித்தபடி கேட்டார்.

நாம் அதைத் தவிர்க்க விரும்பினோம். பின்னர் சில நண்பர்களுக்கூடாகச் சீனி,தேசிக்காய், குளுக்கோஸ், கோடியல் போன்றன தரப்பட்டன. அதில் தலைமை ஜெயிலரின் பங்கும் அதிகம் இருந்தது.

1.02.2002 அன்று ஒரு நாள் அடையாள உணவு தவிர்ப்பில் புதிய கட்டடத்தில் 41 கைதிகளும் பெண்கள் பிரிவில் ஒருவரும் (வாகரையைச் சேர்ந்த இவர் சிறைக்குக்கு வந்து சில மாதங்களே ஆகியிருந்தன) உணவு தவிர்ப்பில் இறங்கினோம். ஏன் இந்த உணவு தவிர்ப்பு என்ற தலைப்பில் 12 விடயங்களைக் குறிப்பிட்டு ஒரு பெரிய கடதாசியில் எழுதிச் சுவரில் ஒட்டியிருந்தோம்.

# ஏன் ? உணவு தவிர்ப்பு

1-விசாரிக்கப்படாமலேயே தண்டனையை அனுபவித்து வருகிறோம்

2-குற்றப் பத்திரிகையை அடிப்படையாக வைத்து ஒருவர் மீது பல இடங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

3-மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் கால வரையறையற்ற உத்தரவு நீக்கப்படவேண்டும்.

4-அனுராதபுரம், கண்டி மேல் நீதிமன்றுகளில் நீண்ட தவணைகள் போடப்படுகின்றன.

5-குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு நீதிமன்றம் நிராகரித்தபோதும் இன்னோர் நீதிமன்றத்தில் அதன் மீது வழக்குத் தொடர்கிறது.

6- திட்டமிட்டுத் தடயப்பொருள்களை விசாரணையாளர்கள் சேர்க்கிறார்கள்.

7-சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை உரிய நேரத்தில் கிடைப்பதில்லை.

8-வழக்குத் தொடரமுடியாது என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்த பின்பும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது

9-ஒரே குடும்பத்தில் பல அங்கத்தவர்கள் சிறையில் வாடுகிறார்கள்.

10-சாட்சிகள் உரியநேரத்தில் நீதிமன்றுக்கு வருகை தருவதில்லை.

11-வயோதிபர்கள், மாணவர்களைக் கால வரையறையின்றித் தடுத்து வைத்திருக்கிறார்கள்.

12-நீண்ட காலமாக நாம் சிறை வைக்கப்பட்டிருப்பதால் எமது குடும்பங்களின் பொருளாதார நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எமது குடும்பங்களுக்கு நிவாரணம் தேவை.

எவ்வித நிபந்தனைகளுமின்றி எம்மை விடுதலை செய்வதற்கான அழுத்தங்களை உரியவர்களுக்குக் கொடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

## தமிழ் அரசியல் கைதிகள்

மட்டக்களப்புச் சிறைச்சாலை

(தொடரும்)

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

31



## நகரத்து மாடுகளின் சாணகம் உதவாது

மாடுகளின் சாணகம் மிகச் சிறந்த பசளை. விவசாயிகள்; பாரம்பரியமாகப் பயன்படுத்தி வரும் பசளை இந்த மாட்டெரு. எவ்வளவுதான் செயற்கைப் பசளைகள், உரங்கள் வந்துகுவிந்தாலும் மாட்டெருக் கலந்து வருடாவருடம் தோட்ட மண்ணை உழும் பழக்கம் நம்மூர் விவசாயிகள் பலரிடம் இப்போதும் இருக்கிறது. மாட்டெரு என்பது நிலத்துக்கும் பயிருக்கும் ஊட்டமளிக்கும் நல்லதொரு இயற்கைப் பசளை.

நெல் விதைப்பு, பயிர் நடுகைக்கு முன்னர் மாட்டெருவுக்கு அதிக கேள்வி எழுந்துவிடும். மாட்டெருகின் விலை எகிறியிருக்கும். விவசாயத்தில் மாட்டெருவின் வகிபாகம் முதன்மையானதாக இருக்கிறது. தோட்டங்களுக்குப் பசளையிடுவதைவிட மாட்டுச் சாணகத்தில் பிள்ளையார் பிடிக்கும் வழக்கமும் இந்துக்கள் மத்தியில் இருக்கிறது.

கிராமங்களில் மாட்டெருவைச் சேர்த்து விற்று வாழ்வாதாரத்தை நடத்துவோர் பலர் இருக்கின்றனர். மாட்டெருச் சேர்ப்பதை முழுநேர, பகுதிநேரத் தொழிலாகச் செய்வோரும், பொழுதுபோக்காகச் செய்து பணம் சம்பாதிப்போரும் எனப் பல விதத்தில் கிராமத்தவர்கள் இருக்கிறார்கள். கிராமங்களில் மாடுகள் அதிகளவில் இருப்பதாலும், புற் தரைகள், நிலங்கள் அதிகளவில் இருப்பதாலும் அங்கெல்லாம் மாட்டெரு நிறைந்து கிடக்கிறது. அவற்றைச் சேர்ப்போரும் அதிகம் இருக்கிறார்கள்.

இந்த நிலை நகர்ப்பகுதிகளில் இல்லை. மாடுகளைக் கட்டி வளர்க்கிற நிலையும் கட்டி வைத்து அவற்றுக்கு உணவளிக்கின்ற நிலையுமே நகர்களில் இருக்கிறது. அதனால் கிராமங்களைப்போல அதிக தொகை மாடுகளை நகர்ப் பகுதிகளில் காணமுடியாது. கண்ணுக்குத் தெரிகிற ஒன்றிரண்டு மாடுகளின் சாணகத்தைப் பிள்ளையார் பிடிப்பதற்கு எடுக்கப்போனால் நீங்கள் பெரும்

09

# வாரம் ஒரு சொல்....!

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் பலவற்றைச் செம்மண் ஞாபகப்படுத்த முயற்சிக்கிறது. இத்தகைய சொற்களை முதியவர்களும் கிராமங்களில் வாழும் பூர்வீகத்தினர் சிலருமே இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச வாரியாகவும் தொழில் ரீதியாகவும் பண்பாட்டு விழுமியங்களின் வழியாகவும் பேசப்படுபவையாக இவை இருக்கின்றன.

பேச்சு மொழியில் இருந்து வருகின்ற இத்தகைய யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள் பலவும் தற்போது அருகி வருகின்றன. அதற்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களும் இந்தியப் பேச்சு மொழிச் சொற்களும் பேசப்படுவது அதிகரித்து வருகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பாரம்பரியப் பேச்சு மொழிச் சொற்களை அழியவிடாது பாதுகாப்பதற்காகவும், நினைவு படுத்துவதற்காகவும் வாரம் ஒரு சொல் என்ற அடிப்படையில் அவற்றை வெளிக்கொணர இருக்கிறோம்.

இவ்வாறான அருகிவரும் சொற்களைச் செம்மண் பத்திரிகைக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற நீங்களும் அனுப்பி வைக்கலாம். அதற்கான விளக்கத்தையும் - அது எடுத்தியம்பும் கருத்தையும் விரிவாகக் குறிப்பிடலாம். அவ்வாறு அனுப்புவதன் மூலம் எதிர்காலத்தில் இந்தச் சொல்வளத்துக்கான ஓர் அகராதியைத் தயாரித்து அந்தப் பாரம்பரியச் சொற்களைப் பேணவும் தமிழ் மக்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தவும் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தவும் முடியும்.

இந்தச் சொற்களை அறிமுகப்படுத்துபவர்கள் அந்தச் சொல் எந்த அர்த்தத்தில் பேசப்படுகிறது என்ற கருத்தை முழுமையாகத் தருவதுடன் அது பெயர்ச் சொல்லாகவா அல்லது வினைச்சொல்லாகவா அல்லது எவ்வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் குறிப்பிடுவது சிறந்தது - வரவேற்கத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை மட்டுமல்லாது மட்டக்களப்பு, வன்னித் தமிழ்ச் சொற்களையும் இந்தப் பகுதியில் குறிப்பிடலாம். அந்தச் சொற்களையும் செம்மண்ணுக்கு அனுப்பி வையுங்கள். இது அருகிவரும் ஈழத் தமிழைக் காக்கும் ஒரு சிறு முயற்சியே.

இந்த வாரச் சொல்

### "அரக்கு"

இந்தச் சொல் பெரும்பாலும் வினைச் சொல்லாகவே பயன்படுத்தப் படுகிறது. பாரம் நிறைந்த பொருள் ஒன்றைத் தூக்குவதற்கு 5 பேர் தேவைப்படும்போது 2 பேர் மாத்திரமே இருந்தால் அந்தப் பொருளைத் தூக்க முடியாத நிலையில் இருக்குமிடத்திலிருந்துது அதைச் சற்று நகர்த்தி வைப்பதானால் "அரக்கி வைத்தல்" என்பர்.

பேருந்தில் அல்லது சனப் புழக்கம் அதிகமான பொது இடங்களிலுள்ள இருக்கைகள், வாங்குகளில் 3 பேர் அமரக்கூடிய இடத்தில் 3 பேர் அமர்ந்திருக்க, 4ஆவது நபர் இருப்பதற்கு இடம்கேட்கும்போது, "கொஞ்சம் அரக்கி இருங்கோ" என்று கூறுவதுண்டு.

பொதுவாக அரக்குதல் என்பது மெதுவாக நகர்த்துதல், சற்று நகருதல் என்று அர்த்தப்படுகிறது. யாராவது மெதுவாக நடந்து வந்தால், "என்ன அரக்கிக் கொண்டு வாறாய்", "ஆமை வேகத்தில் அரக்கிக் கொண்டு நிக்கிறாய்" என்றும் சொல்வதுண்டு.

பருமனான உடலமைப்புள்ள பெண்களை அரக்கி என்றும், ஆண்களை அரக்கன் என்றும்கூடக் கூறுவதுண்டு. கோவிலில் தேரிழுக்கும் போது பாரமான பொருளான தேரை நகர்த்திச் செல்வததால் "தேர் அரக்கி அரக்கி வரக் கன நேரம் எடுத்தது" என்பர். பொதுவாகவே மெதுவான நகர்வைக் குறிப்பிடப் பயன்படும் பொதுச் சொல்லாக அரக்குதல் என்பது இருக்கிறது.

ஏமாற்றத்தையே அடைவீர்கள்....! போதாக்குறைக்கு அசௌகரியத்தை எதிர்கொள்ளவும் நேரிடும். நகரத்து மாடுகளின் சாணகத்திலிருந்து வருகின்ற நாற்றத்தால் பாதிக்கப்படவும் செய்வீர்கள். நகரத்து மாடுகளின் இந்தச் சாணகம் ஏன் அதிக தூர் நாற்றமுடையதாக இருக்கிறது...?

பிள்ளையார் பிடிப்பதற்கு மாத்திரமல்ல பசளையாகப் பாவிப்பதற்கும் அது உதவாமல் இருப்பது ஏன்...?

கிராமத்து மாடுகளைப்போல இயற்கையான உணவுகள் நகரத்தில் கட்டி வளர்க்கப்படும் மாடுகளுக்கு இடப்படுவதில்லை. தேவைக்கு அதிகமாகக் கிடைக்கின்ற இலை, குழைகள், மரங்கள், தாவரங்கள் மூலம் கிடைக்கின்ற உணவுகள், புற்தரைகள், மேய்ச்சல் நிலங்கள் எனக் கிராமத்து மாடுகள் இயற்கையான உணவை உள்ளெடுக்கின்றன. அவை பச்சையம் நிறைந்த இலை - குழைகளாக இருப்பதால் அவற்றின் செரிமானம் மாடுகளின் மலமாகப் பச்சையம் நிறைந்து வெளிவருகிறது. அதில் பச்சையத்தின் வாசனையும், இயற்கையான இலை, குழைகளின் மணமுமே நிறைந்திருக்கும். ஆனால் நகரத்து மாடுகளின் நிலையோ இதற்கெல்லாம் எதிர்...!

நகரத்து மாடுகளுக்கு உணவு வழங்கக்கூடிய அளவுக்கு நகர்களில் இலை, குலைகள், புற்தரைகள், மேய்ச்சல் நிலங்கள் இல்லை. இங்கு மாடுகளை வளர்ப்போர் இலை, குலை தேடிச் சென்று வெட்டி எடுத்து வந்து மாடுகளுக்கு வழங்கும் நிலையில் இல்லை. இதனால் இந்த மாடுகளுக்குத் தீவனங்களே அதிகம் வழங்கப்படுகின்றன. அரைக்கப்பட்ட நிலையில் கடைகளில் கிடைக்கின்ற தீவனங்களை வழங்குவதால் அவற்றின் மலம் அந்தத் தீவனக் கழிவாகவே வெளிவருகிறது. இது தவிர நகரத்து மாடுகளைக் கட்டவிழ்த்து விட்டால் நகரத்தில் வீசப்பட்டுக் கிடக்கின்ற உணவுக் கழிவுகள், சாக்கடைகளில் வீசப்பட்டுக் கிடக்கின்ற, மாடுகள் உண்ணக்கூடிய வேறு சில கழிவுகள் எனப் பலதையுமே நகரத்து மாடுகள் உண்கின்றன. இதனால் அவற்றின் சாணகத்தில் இருந்து துர்நாற்றம் எழுகிறது. நகரத்து மாடுகளின் சாணகத்தைக் கண்டால் தூர விலகும் நிலை ஏற்படுகிறது. பச்சையம் இல்லாத நகரத்துச் சாணகத்தைக் கண்டாலே அருவருப்புக்குள்ளாக நேரிடுகிறது. இவற்றால்தான் நகரத்து மாடுகளின் சாணகம் எதற்கும் உதவாததாக இருக்கிறது.

74

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்

மனமானது நம்பிக்கை, நம்பிக்கையீனம் என ஏதோ ஒரு வடிவத்தைத் தனது தீர்மானமாக எடுத்துக்கொள்கின்றது. ஏற்கனவே மனத்தை ஆக்கிரமித்திருக்கிறவை எவையோ அவை சார்பான தீர்மானமாகவே அனேகமாக இருந்து விடுகின்றன. ஆனால் மனந்தான் ஓரிடத்திலிருந்தறியாததாயிற்றே! தானடைந்த தீர்மானம் சரியானதா தவறானதா எனக் கேட்டு மீண்டும் சலனப்படத் தொடங்குகிறது. எடுத்த தீர்மானமே இப்போது கேள்வியாகி விடுகிறது. ஆக சிலவேளைகளில் ஒரு பதிலுக்குப் பிரதியீடாக பல கேள்விகளே மீண்டும் கிடைத்திருக்கிறன. இதனது தொடங்கு புள்ளி மறந்துபோக அலையத் தொடங்குகிறது எண்ணம்.

அது எப்போது ஓய்வடையும்? மனதிற்கெட்டிய அனைத்தும் மறைந்தோ மறைந்தும் மறையாதோ மறையாமலேயோ இருக்கக்கூடியது என்கிறார்கள் உளவியலாளர்கள். மனதிற்கெட்டிய யாவும் மனத்தால் வரையப்பட்ட நல்லது கெட்டது எனும் பிரிகோட்டிற்கு இரு புறமுமாய் இருந்து விடுகின்றன. ஆனால் சில எங்கே தன்னை வைப்பதெனத் தெரியாது தடுமாறவும் செய்கின்றன. இவை மனதைப் பெரியளவில் அரித்துக்கொண்டிருக்கின்றன. நல்லதாக அல்லது கெட்டதாகக் கருதியவை மறைந்தோ மறைந்தும் மறையாதோ இருந்துவிட வாய்ப்புகள் அதிகம்.



ஆனால் பிரிகோட்டு எல்லையில் அல்லாடுபவை மறைவதில்லை. காரணம் அது அடிக்கடி பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதுதான். நினத்துக்கொண்டே இருப்பது எப்படி மறையமுடியும்? எதுவும் உருவாகுவதுமில்லை. அழிவதுமில்லை. வடிவத்தில், இயல்புகளில், குணங்களில்



கலைச்செல்வன் விவர்ணிகா

# ஒழிந்துபோ!

கொரோனோவே கொன்றதுபோதும்
கோடி புண்ணியம் ஓடிவிடு!
சீனாவில் தோன்றி - இன்று
உலகம் முழுவதும் பரவி
பல்லாயிரம் உயிர்கள் கொன்றும் - உன்
ஆத்திரம் அடங்கவில்லையா?

ஆசையாய் நெருங்கி உலவும் மக்களை
ஆறடி தூரம் கொண்டு சென்றாய்
முகமூடி தந்து நீயும் முகத்தை மூடச் செய்தாய்
எம் மக்கள் மனதில் பயத்தை நீக்கமற விதைத்தாய்

நீ போகும் நேரம் வந்தது - என்று
ஆனந்தம் பிறந்த வேளையில்
இதோ உன் அண்ணன் தம்பியுடன் - மீண்டும்
எம்மை வாட்ட வந்துவிட்டாயே

ஒமிக்ரோன், டெல்ரா என்று - உன்
தொல்லை எல்லை கடக்கிறது
இன்னும் என்னென்ன வடிவமெடுத்து - எம்மை
வதைக்க வருவாய் நீயும்?

நீ போய்தொலைந்தால் போதுமென்று
ஆவலாய் காத்திருந்த எமக்கு
குரங்கம்மை என்று - மீண்டும்
பயங்காட்டுகிறார்கள் நீ ஒழிந்தே போ!

மாறுபடுகின்றன. அவ்வளவே. ஆகவே மறைந்தது என்பது ஏதோவொரு சந்தர்ப்பத்தில் ஏதோவொரு வடிவத்தில் உருக்கொள்கிறது. இது அறிவியல்.

இங்கேதான் எமது சூழலில் உள்ள யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளவேண்டியுள்ளது. எமது மனமானது மேற்குறித்த சிக்கல்களோடு இருக்கையில் எமக்கு முன்னால் ஒரு செயல் நடக்கும்போது எப்போதோ பெற்றிருக்கக்கூடிய பதிவு மனத்துள் எழுந்து கொள்கிறது. அந்நினைவும் தற்போதய நிகழ்வும் ஒன்றாக்கப்படுகிறது. ஒத்த ஒவ்வாத இயல்புகள் குறித்த விசாரணையில் முன்கூறியபடி மனதினது தீர்மானங்கள் செல்வாக்குச் செலுத்தத் தொடங்குகின்றன.

குறித்த நடப்பு விடயம் எதுவாயினும் ஏற்கனவே எடுத்திருந்த தீர்மானத்தின் செல்வாக்குடனேயே உணரவும் தொடர்செயலுக்காகத் திட்டமிடவும் வழிநடக்கவும் தன்னியல்பாகத் தயாராகிக்கொள்கிறோம். ஆக செயலினது அவசியம், தேவை என எல்லாமுமே பின்தள்ளப்பட எமது மனமே காரணமாகிறது. செயல்விளைவு கைக்கெட்டாமைக்கு முதற்காரணமாக மனமே இருந்துவிடுகிறது. இது சூழல் மற்றும் சந்தர்ப்பம் போன்றன தொடர்பாக கற்பிதங்கள்வழி பார்த்துவிடுகிற அபத்தமும் நடந்துவிடுகிறது. நிதானமாக களயதார்த்தத்தை தவறவிட்டுவிடுகிறோம்.

முன்பொருமுறை பேசிக்கொண்டதுபோல கவனம் தவறுவதற்கு எமது மனத்தினது தடுமாற்றமே முழுக் காரணமுமாகும் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். கவனம் தவறுவதற்குக் காரணமாக மனதினது கற்பிதங்களோ அல்லது முன்னெப்போதோ எடுத்திருந்த திர்மானங்களோதான் இருக்க நாமோ எமக்கு வெளியேயான கற்பனைக் காரணிகளையே பெரிதும் நம்புகிறோம். அவற்றையே குறையும் கூறி அவற்றின் மீதே குற்றமும் சுமத்துகிறோம்.

எமது பலமும் எமது மனமே. பலவீனமும் அதுவே. வெற்றி தோல்வி, நல்லது கெட்டது, சாதகம் பாதகம், எனவாக நீளப்பட்டியலை உண்டாக்கக்கூடிய அத்தனையும் எமது ஒற்றை மனமே என்பதை முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படி ஏற்றுக்கொண்டு என்ன சந்நியாசமா போக? என்கிற கேள்வியை எழுப்பலாம். இல்லையா?

சரி சந்நியாசம் என்பது என்ன? அதிலொன்றுமே இல்லை. அனைத்தையும் துறத்தல் என்பது சாத்தியமானதா என்பதற்கப்பால் அப்படி முடியுமாயின் அவ்வாறான உறுதியுள்ள ஒருவன் ஏன் அனைத்திலிருந்தும் ஒதுங்கியிருக்கவேண்டும்? இவ்வாறாக நாம் எப்போதாவது எண்ணியிருக்கிறோமா? நாம் கற்பித்து வைத்திருக்கிற பாவம் புண்ணியம், நன்மை தீமை என எதனையும் சந்திப்பதற்கான அச்சந்தான் சந்நியாசமா?

நாம் கற்பித்திருக்கிற சுவர்க்கம் நரகம் தொடர்பான மனப்பதிவுகள்தான் துறவறம் அல்லது சந்நியாசம் என்பதை வழிப்படுத்துகின்றன. துறவறம் என்பதானது இயலாமையினது உச்ச நிலையென ஏன் கொள்ளக்கூடாது? வாழவும் மனதை எம்வசமே வைத்திருக்கவும் வழிகள் பல யதார்த்தத்தில் இருக்க மாயத்தை நோக்கிய வழியில் செல்வது சரியானதுதானா? சிந்திப்போம்.



# அதிகாரம்

*குப்பிளான் குமரன்*

*தந்தைக்கு குடும்பத்தின்*
*தலைவனாய் இருப்பதால்*
*அதிகாரம்*
*தாய்க்கு பிள்ளைகளை*
*பெற்றதால் அதிகாரம்*

*முதலாளிக்கு தொழிலை*
*உருவாக்கியதால்*
*அதிகாரிகளுக்கு*
*பதவிகளில் இருப்பதால்*

*அரசியல்வாதிகளுக்கு*
*ஆட்சியில் இருப்பதால்*
*அன்றைய காலத்தில்*
*அரச குடும்பத்தில் பிறந்ததனால்*

*அதிகாரத்தை அன்போடு*
*பயன்படுத்தினால்*
*உலகமே அவர்களை*
*அன்புடன் அரவணைத்து வரவேற்கும்*

*துஷ்பிரயோகம் செய்யின்*
*இருந்த இடம் தெரியாது*
*அழிந்து போய் விடுவர்*
*அதிகாரம் அவசியம்*
*ஆனால் அவதானமாக*
*பயன்படுத்தவேண்டும்*



# போதைப் பொருள் பாதிப்பில் இந்து மதத்தின் கரிசனை தேவை

நாகராசா

யாழ். குடாநாட்டில் இது வரை 15-20 பேர் வரை ஊசி மூலம் கெரோய்ன் போதையை உடட்செலுத்தியதால் சாவடைந்திருக் கிறார்கள். கொரோனாத் தொற்றுக் காலத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு முடங்கியிருந்த சூழலில் இந்தப் போதைப் பொருட் பாவனை சாதாரண மக்கள் மத்தியில் அதிகம் பரவியது.

போதைப் பாவனையால் இறப்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்த போதும்கூட இந்து, சைவ நிறுவனங்கள் அதுபற்றி எதுவும் பேசவில்லை. இறந்தவர்களில் அதிகமானவர்கள் சாதி ரீதியாக ஒடுக்கப்பட்டவர்கள் - தாழ்த்தப்பட்டவர்கள் என்று வரையறுக்கப்பட்ட மக்களாக இருந்தனர் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பால சுப்ரமணியம் கண்ணதாசக் குருக்கள் என்ற 34 வயதான பூசகர் ஒருவர் ஊசி மூலம் போதை மருந்தை ஏற்றியதால் அண்மையில் இறந்தார். இது சாதிய அடுக்குகள் அனைத்திலும் போதைப் பாவனை ஊடுருவியிருப்பதையே காட்டுகின்றது.

வடக்கில் போதைப் பொருளைத் தடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம் என்று அதன் பின்னர் ஆறு. திருமுருகன் அறைகூவல் விடுத்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் பூசகர் போதைப் பொருளைப் பாவித்து இறந்த செய்தியைத் தவிர்த்திருக்கிறார். வடக்கில் போதைப் பொருள் பாவனை 2010க்குப் பின்னரான காலப்பகுதியில் அதிக உச்சமடைந்தது. இந்தப் பாவனை சாதாரண மகக்கள் மத்தியில் முதலில் பழக்கப்பட்டாலும் பின்னர் வசதியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் எனப் பரவித் தற்போது பெண்களும் உள்ளெடுக்கும் அளவுக்கு யாழ்ப்பாணத்தில் நிலமை மோசமடைந்திருக்கிறது.

பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்கு முகநூல் வழியாக நண்பர்களை அழைத்துப் பெரிய விடுதிகளில் போதைப் பொருளுடன் கூடிய பல நிகழ்வுகளை ஒழுங்கமைத்தவர்களைக் காவல்துறையினர் சுற்றிவளைத்துப் பிடித்த சம்பவங்களும் இலங்கையில் பல இடங்களில் நடந்துள்ளன.

**யார் இதைச் செய்விக்கிறார்கள்?**

போதைப் பொருள் குடாநாட்டுக்குள் எவ்வாறு வருகிறது? போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு மாற்றுவழி என்ன? என்ற கேள்விகளைத் தனது அறிக்கையில் எழுப்பியுள்ளார் ஆறு.திருமுருகன். போதைப் பொருள் கடத்துபவர்களையும், விற்பனை செய்பவர்களையும் சட்டத்திலிருந்து யார் காப்பாற்றுகிறார்கள் என்ற கேள்வியையும் ஒரு சமூக அக்கறையுள்ள சமயத் தலைவராக அவர் எழுப்பவேண்டும். அது குறித்துத் தேடிப்பார்த்தால் தமிழ்ச் சட்டத்தரணிகளே என்பது பலருக்கும் தெரிந்த விடயம். இந்த வழக்குகளை ஆராய்ந்தால் போதைக் கடத்தலில் ஈடுபட்ட குறிப்பிட்ட நபர் அல்லது அவரது ஆட்களைப் பல தடவைகள் பிணை எடுத்தவர் ஒரே சட்டத்தரணியாக இருப்பார்.

பூசகர் ஒருவர் போதைப் பொருளைப் பயன்பத்தி இறக்கும் வரைக்கும் சமயத் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் பொறுமை காத்தமையே தவறானது. இந்த விசச் செடியை முளையிலேயே கிள்ளி எறிந்திருக்க அவர்கள் முன்வந்திருக்கவேண்டும். ஒழுக்கமற்ற சமயத் தலைவர்களை இந்து மத நிறுவனங்கள், ஆறுதிரு

# சிங்களவரின் ஒற்றுமையும் தமிழரின் புடுங்குப்பாடும்





ஒரு சில நாள்களுக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிக்கை ஒன்றை வெளியிட்டார். ஐ.நாவில் இலங்கை எதிர் கொள்ளவிருக்கும் நெருக்கடிக்கு நான் இலங்கை சார்பாகவே முடிவெடுப்பேன் - என்று அதில் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். அவரது கட்சியைச் சேர்ந்த பீல்ட் மார்சல் சரத்பொன்சேகாவோ, இறுதிப்போரில் போர்க் குற்றம் நடந்ததற்கான ஆதாரங்கள் என்னிடமுண்டு - என்று கூறியிருக்கிறார். ஆனால் அதை ஓர் அறிக்கையாக ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்கு அனுப்புவதற்கு அவர் தயாராக இல்லை.

இலங்கை என்கிற நாடு சிங்களப் பெரும்பான்மை மக்களுக்குரியது. தமது மொழி சிங்களம், மதம் பௌத்தம் என சிங்களவர்கள் மிகக் கச்சிதமாகக் கையாண்டு வருகிறார்கள். நிலமை இவ்வாறிருக்கும்போது இறுதிப் போரில் ஒரு லட்சத்து 40ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்று கூறும் தமிழ்த் தேசியவாதிகளும் அவர்தம் கட்சிகளும் போர் முடிந்து 13 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில்கூட அதில் கொல்லப்பட்டவர்களின் விவரங்களைத் திரட்டிப் பட்டியல் தயாரிக்கவில்லை. அது தமது அரசியலுக்குப் பாதகமாகிவிடும் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும்.

**விதுரன்**

### போராடியவர்கள் வேறு அரசியல் செய்வோர் வேறு

போரில் பங்கேற்ற குடும்பத்தைச் சேர்ந்த எவரும் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் செல்லவில்லை என்பதும் தமிழீழப் போராட்டத்துக்காகப் பசி கிடந்தவர்களோ, இடப்பெயர்வுகளால் பல மைல்கள் வரை சைக்கிள் ஓடியவர்களோ, பாம்புக்கடி, நுளம்புக்கடி என முகம் கொடுத்தவர்களோ, காயப்பட்டவர்களோ, ஊனமுற்றவர்களோ, சிறை வைக்கப்பட்டவர்களோ தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. அனந்தி சசிதரன் இதில் ஒரு விதிவிலக்கு. போர் முடிந்த மறு ஆண்டே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் போராடியவர்கள் எவரும் பங்கு பற்றும் சூழல் இருக்கவில்லை. போராடிச் சரணடைந்தவர்கள்கூட மறுவாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

2015ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பத்திரிகையாளர் வித்தியாதரன் தலைமையில் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் போராளிகளைப் படுதோல்வி அடைய வைத்ததில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் முருகன், விக்னேஸ்வரன், மறவன்புலவு சச்சிதானந்தன் ஆகியோர் அடையாளம் கண்டு அவர்களை மறுவாழ்வுக்குட் படுத்த வேண்டும்.

மாதா பிதா குரு தெய்வம் என்ற வரிசையில் வருகிற குரு என்பவர் நன்கு கற்றறிந்தவராகத் தனது மக்களுக்குக் கல்வி கற்பிப்பவராக இருக்கவேண்டும்.

### ஊசி மூலம் ஏற்றும் போதைப் பொருள்

போதையை ஊசி மூலம் ஏற்றும் வழக்கம் மிக நீண்ட காலமாக உலகெங்கும் நடந்து வருகிறது. அவ்வாறான தயாரிப்புகள் ஆய்வுகூடங்களில் உற்பத்தியாகின்றன. ஊசி மூலம் ஏற்றப்படும் மருந்து, போதைகள் நேரடியாக் குருதியில் கலப்பதால் அது உடல் முழுதும் மிக வேகமாகப் பரவும். மூளை, இதயம், சிறுநீரகம் ஆகிய முக்கிய அங்கங்களை விரைவில் பாதிக்கிறது. இதனால் இறப்பு நிகழ வாய்ப்புண்டு.

யாழ். குடாநாட்டில் என்றில்லாமல் இலங்கையில் ஊசி மூலம் ஏற்றப்படும் போதைப் பொருள் விஞ்ஞான ஆய்வு கூடங்களில் தயாரிக்கப்படாமல் பயன்படுத்தப்படுகிறது. அவை விலேச் விஞ்ஞானிகள் எனப்படும் உள்ளூர்வாசிகளால் தயாரிக்கப்படுபவை. சாதரண கெரோய்ன் தூளை எலுமிச்சம் புளியில் கலந்து அதைச் சூடாக்கிப் பெறப்படும் திரவத்தை ஊசி மூலம் ஏற்றிக் கொள்கிறார்கள் என்று விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.இதுவே அளவுக்கு அதிகமாக ஏற்றிக்கொள்ளும்போது இறப்பும் உடனடியாகச் சம்பவிக்கிறது.

எனவே தமிழ்ச் சமூகத்தை அழிவிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பு மதத் தலைவர்களுக்கு அதிகம் உண்டு. அந்த வழியில் ஆறுதிருமுருகன் முதலடியை எடுத்து வைத்திருக்கிறார். வெறும் அறிக்கையோடு அவர் நின்றுவிடக் கூடாது. போதை தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைக்கு அவர் தலைமையேற்கவேண்டும். மறவன்புலவு சச்சிதானந்தன், முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், நல்லை ஆதீனக் குருமகா சந்நிதானம் போன்றோரும் இந்து சமயப் பேரவை, சைவ சமயப் பேரவை போன்ற இந்து மத நிறுவனங்களும் திருமுருகன் வழியில் நடக்க முன்வரவேண்டும்.

கோவில் கட்டுவதிலும், கோபுரங்கள் எழுப்புவதிலும் வெளிநாட்டுப் பணத்தை உறுஞ்சுவதிலும் காட்டுகிற அக்கறையை மக்களின் வாழ்வியல் விடயத்திலும் இந்து அமைப்புக்கள் இனியாவது காட்ட முன்வரவேண்டும்.

புக்கும் ஏனைய தமிழ்த் தேசியம் பேசிய கட்சிகளுக்கும் அதிக பங்கிருந்தது.

**புலிகளை வைத்து அரசியல்**

2010இல் நாடாளுமன்றம் சென்றவர்கள் ஒருபோதும் இறுதிப் போரில் இறந்தவர்களின் பட்டியலைத் தயாரிப்பதிலோ அதை ஐ.நாவுக்கு அனுப்புவதிலோ அக்கறை செலுத்தவில்லை. சிறையிலுள்ள கைதிகளையே விடுவிக்க முழு முயற்சி செய்யாத அவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களையோ இறந்து போனவர்களையோ திரும்பிப் பார்க்கப்போவதில்லை. இது விடயத்தில் தமிழ்த் தேசியம் பேசுகின்ற அரசியல்வாதிகளும் அவர்களுக்கு எதிரானவர்களும் ஒரே நிலைப்பாட்டில் இருப்பது வேடிக்கையானது.

புலிகள்தான் நாங்கள் என்று கூறுபவர்களும் போரில் கொல்லப்பட்டவர்களின் பட்டியலைத் தயாரிக்கவில்லை. நாங்கள் அரசுடன் இணைந்து செயற்படுகிறோம் என்பவர்களும் அந்தப் பட்டியலைத் தயாரித்து அரசுக்குக் களங்கம் ஏற்படுத்த விரும்பவில்லை. ஆனால் இருசாராரும் புலிகளை வைத்தே இன்று வரை அரசியல் செய்கின்றனர்.

**தமிழர் தரப்புக் குறைபாடு**

இறுதிப்போர் பற்றிய பல்வேறு அறிக்கைகள் ஆங்காங்கே வெளியிடப்பட்டுள்ளன. அதில் ஓர் அறிக்கையில் புலிகளின் ஆதரவாளர்கள் சொல்லும் ஒன்றரை லட்சம் பேர் இறந்திருந்தால் குறைந்த பட்சம் இன்னும் பல லட்சம் பேராவது காயமுற்றிருக்க வேண்டும். ஆனால் இவ்வாறான தொகையினருக்கு அந்த நேரத்தில் அங்கு கடமையாற்றிய மருத்துவர்களோ செஞ்சிலுவைச் சங்கமோ சிகிச்சை அளித்ததாகத் தகவல் ஏதும் இல்லை என்றுள்ளது.

**தமிழர் தரப்பில் உள்ள குறைபாடுகளில் முக்கியமானது உரியவாறு தரவுகளைச் சேகரிக்காமை ஆகும். இதில் ஆச்சரியமான இன்னோர் விடயமும் உண்டு, தமிழ் அரசியல்வாதிகளில் நீதிபதி உட்படப் பல சட்டத்தரணிகளும் உள்ளபோதிலும் இது விடயத்தில் அக்கறையின்றி ஒரு மித்த முடிவு எடுக்காமல் இருக்கிறார்கள்**

தமிழர் தரப்பில் உள்ள குறைபாடுகளில் முக்கியமானது உரியவாறு தரவுகளைச் சேகரிக்காமை ஆகும். இதில் ஆச்சரியமான இன்னோர் விடயமும் உண்டு, தமிழ் அரசியல்வாதிகளில் நீதிபதி உட்படப் பல சட்டத்தரணிகளும் உள்ளபோதிலும் இது விடயத்தில் அக்கறையின்றி ஒரு மித்த முடிவு எடுக்காமல் இருக்கிறார்கள். ஒரு சட்டத்தரணி தான் கையிலெடுக்கும் வழக்கில் வெல்வதற்குப் பல்வேறு தரவுகளைச் சேகரிக்கின்றார். இந்த மனநிலை இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்களின் விடயத்தில் பின்பற்றப்படவில்லை. தமிழரிடம் இத்தகைய குறைபாடுகள் இருக்கும்போது சிங்களவர்கள் ஐ.நா. மனித உரிமை விவகாரத்தில் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். அது சிங்களவரின் பலத்தையும் தமிழரின் பலவீனத்தையுமே காட்டுகிறது.

காலிமுகத்திடல் போராட்டத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்தது, கஞ்சி காய்ச்சியது, அறிக்கை விட்டது எல்லாம் சிங்களவரில் ஒரு சிலரால் மட்டும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே தவிர பெரும்பான்மைச் சிங்களவர் ஒருபோதும் தமிழருக்குச் சார்பாக இருக்கப்போவதில்லை.



# கோப்ரா

## வதைக்கும் பாம்பு!






கணக்கில்

அதிபுத்திசாலியான ஆசிரியர் ஒருவர் கணிதத்தை கற்பித்தலுக்கு மட்டுமன்றி கொலைகளுக்கும் பயன்படுத்துகிறார். அவர் என்ன செய்கிறார் என்கிற நிகழ் கதையும், ஏன் செய்கிறார் என்கிற பின் கதையும்தான் 'கோப்ரா'. தலைப்புக்கும் படத்துக்கும் என்ன சம்பந்தம் என்பது இயக்குநருக்குத்தான் வெளிச்சம்.

உலக நாடுகளில் இருக்கும் முக்கியமான தலைவர்களை மதி (விக்ரம்) என்கிற கணக்குப் புலி தன்னுடைய கணிதவியல் நுணுக்கங்களை பயன்படுத்தி கொலை செய்கிறார். அவர் யார்? எதற்காக இந்த கொலைகள்? பின்னால் இருக்கும் சதி என்ன? என்பவற்றைக் கண்டுபிடிக்க முடியாமல் காவல் துறை திணறி வருகிறது.

இப்படியான சூழலில், திடீரென அவரைப் பற்றிய துப்புகளையும், தகவல்களையும் திரைமறைவிலிருக்கும் ஒருவர் காவல் துறைக்கு வெளிப்படையாக கொடுக்கத் தொடங்குகிறார். அந்த மர்ம நபர் யார்? அவருக்கும் மதிக்கும் என்ன தொடர்பு? - இப்படி பல முடிச்சுகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து விடை சொல்லும் படம்தான் 'கோப்ரா'.

'டிமான்டி காலனி', 'இமைக்கா நொடிகள்' படங்களை இயக்கிய அஜய்ஞானமுத்து இப்படத்தை இயக்கியுள்ளார். படத்தின் பலமே விக்ரம்தான். மொத்த படத்தையும் விக்ரமிடம் ஒப்படைத்திருக்கிறார் இயக்குநர். தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்கு தேவைக்கு அதிகமான உழைப்பை செலுத்தி நியாயம் சேர்த்திருக்கிறார். இரண்டாம் பாதியில் 'அந்நியன்' பட பாணியிலான அவரது நடிப்பு ரசிகர்களின் கைதட்டலை பெறுகிறது.

இன்டர்போல் அதிகாரியாக கிரிக்கெட்டர் இர்ஃபான் பதான். அறிமுக நடிகராக அந்தக் கதாபாத்திரத்திற்குப் பொருந்திப் போனாலும், மேலோட்டமான எழுத்தால் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அவரது டப்பிங்கில் துருத்தல். ஸ்ரீநிதி ஷெட்டி வழக்கமாக காதலுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கும் கதாபாத்திரம். அவர் படத்தில் இல்லை




என்றாலும் கதைக்கு எந்தப் பாதிப்பும் நேர்ந்திருக்காது. இர்பான் பதானுக்கு பதிலாக மீனாட்சி கோவிந்தராஜனை இன்டர்போல் அதிகாரியாக நியமித்திருக்கலாம். அவர் வேலையையும் சேர்த்து ஓவர் டைம் பார்த்து தேவைக்கு அதிகமான கதாபாத்திரமாக வருவதை உறுதி செய்கிறார். மிருனாளினி ரவி, ரோபோ சங்கர், ஆனந்த்ராஜ், ரோஷன் மேத்யூ கதாபாத்திரத்திற்கு தேவையான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

படத்தின் முதல் பாதியை பொறுத்தவரை ஸ்காட்லாந்து இளரவசர், ரஷ்ய அமைச்சர் என நாடுகளையும் அதீத பாதுகாப்பையும் கடந்து அசலாட்டாக நடக்கும் கொலைகள், அதையொட்டி கொடுக்கப்படும் பில்டப்புகள், லாஜிக் என்றால் என்ன என கேட்கும் அந்தக் காட்சிகள் ஒட்டவேயில்லை. அதேபோல கணிதத்தை கொண்டு க்ளாஸ் எடுத்தது, தலைவர் ஒருவர் கொல்லப்படுவதற்கான டெக்னிக், திணிக்கப்பட்ட காதல் காட்சி என முதல் பாதியில் உள்ள பல வீனமான திரைக்கதையால் கோப்ரா சீறவேயில்லை. தவிர, முதல் பாதியில் உள்ள சில புதிர்கள், அதையொட்டி இடைவேளையில் வரும் திருப்பம்தான் இரண்டாம் பாதியை பார்க்க தூண்டுகிறது.

இரண்டாம் பாதியில் தொடக்கத்தில் வரும் சண்டைக்காட்சியை போதும் போதும் என சொல்லும் அளவிற்கு திகட்ட திகட்ட கொடுத்து பார்வையாளர்களைச் சோர்வுக்குள்ளாக்கியிருக்கிறார்கள். அதையடுத்து புதிர்களுக்கான விடைகள் ஒவ்வொன்றாக சொல்லபடும்போது, சுவாரஸ்யம் தொற்றுவதற்கு பதிலாக குழப்பங்களும் நிறைய கேள்விகளுமே எழுகின்றன. கதையைப் புரிந்துகொள்வதும் மேலும் சிரமமாகிவிடுகிறது. நீட்டி முழங்கி, நிறைய தேவையற்ற காட்சிகள், தேவைக்கு அதிகமான கதாபாத்திரங்கள், 2, 3 ஃப்ளாஷ்பேக்குகள், வில்லன் கதாபாத்திரத்தின் பின்புலத்தில் தெளிவின்மை என இரண்டாம் பாதியும் நிறையவே சோதிக்கிறது. சில சுவாரஸ்யமான காட்சிகள் இருந்தாலும் பல இடங்கள் சோர்வைத் தருகின்றன. குறிப்பாக படத்தின் நீளம் பெரும் துயரம்.

**புதிர்களுக்கான விடைகள் ஒவ்வொன்றாக சொல்லபடும்போது, சுவாரஸ்யம் தொற்றுவதற்கு பதிலாக குழப்பங்களும் நிறைய கேள்விகளுமே எழுகின்றன. கதையைப் புரிந்துகொள்வதும் மேலும் சிரமமாகிவிடுகிறது**

ஏ.ஆர்.ரஹ்மான் பின்னணி இசை கவர்ந்தாலும், பாடல்கள் பெரிய அளவில் மனதில் நிற்கவில்லை. ஒரு கதாபாத்திரம் விபத்துக்குள்ளாகி தலைகீழாக சுற்றும்போது அவருடைய பார்வைக் கோணத்திலிருந்து கேமராவும் சுற்றுகிறது, வெளிநாட்டின் பிரமாண்டம் என படத்தின் ரீச்லுக்குக்கு ஒளிப்பதிவாளர் ஹரிஷ் கண்ணன் கடுமையாக உழைத்திருக்கிறார்.

எடிட்டர்கள் பூவன் சீனிவாசன், ஜான் ஆப்ரஹாம் இருவரும் இணைந்து பேசியாவது படத்தில் தேவையில்லாத காட்சிகளை தூக்கியிருக்கலாம். விமர்சனங்களுக்குப் பின்னர் 20 நிமிடக் காட்சிகளைத் தூக்கியிருப்பதற்குப் பதில் முதலிலேயே அதைச் செய்திருக்கலாம். காட்சிகளை மட்டுமல்ல படத்தையும்தான்.

மொத்தத்தில் கோப்ரா படமெடுத்து சீறிப் பாய்ந்து ஆச்சரியப்படுத்தாமல், சைலன்டாக ஊர்ந்து நெளிந்து வதைக்கிறது. ட்ரெய்லரின் இறுதியில் விக்ரம் கையெடுத்து கும்பிட்டிருப்பார். அதற்கான காரணத்தை படம் பார்த்தவர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடிகிறது.



# நட்சத்திரம் நகர்கிறது

## பளிச்சென மின்னுகிறது

சினிமாவில் நடித்து பெரிய ஹீரோ ஆகிவிட வேண்டும் என்ற கனவுடன் சொந்த ஊரிலிருந்து புறப்பட்டு புதுச்சேரி வருகிறார் அர்ஜுன் (கலையரசன்). அங்கு நாடகக் குழு ஒன்றில் இணைந்து நடிப்பு பயிற்சியில் ஈடுபடும் அவர், குழுவிலிருப்பவர்களின் கருத்தியலில் முரண்படுகிறார். தொடர்ந்து நாடகக் குழு சார்பில் அரசியல் நாடகம் ஒன்று நடத்தத் திட்டமிடப்படுகிறது. இதையொட்டி ரெனே (துஷாரா) - இனியன் (காளிதாஸ்) காதல் முறிவு ஒன்றும் நிகழ்கிறது. இப்படியான பல கிளைக் கதைகளால் நகரும் நட்சத்திரக் கூட்டத்தில் இறுதியில் அரசியல் நாடகம் நடத்தப்பட்டதா, அர்ஜுன் என்ன ஆனார், துஷாரா - காளிதாஸ் காதல் என்னவானது என்பதைச் சொல்லும் படம்தான் 'நட்சத்திரம் நகர்கிறது'.


தமிழ் என்கின்ற ரெனேவாக துஷாரா விஜயன். தமிழ் சினிமாவின் அழுத்தமான பெண் கதாபாத்திர வார்ப்பு. திமிரான உடல்மொழி, யாருக்கும் அஞ்சாத நெறி, தனக்கு தோன்றுவதை பேசி, பிடித்ததை செய்து, தனக்கு என்ன வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கும் நாயகி. இனியனாக காளிதாஸ் ஜெயராமன் தனக்கு கொடுக்கப்பட்ட பாத்திரத்தை கச்சிமாக நடித்துக் கொடுத்திருக்கிறார். ஆனால், அவரது கதாபாத்திரத்தை இன்னும்கூட ஆழமாக எழுதியிருக்கலாம்.

பிற்போக்குத்தனங்களாலான பாத்திரத்தில் கலையரசனின் நடிப்பு ஈர்க்கிறது. அவமானப்படுவது, குடித்துவிட்டு சண்டையிடுவது எனக் கவனிக்க வைக்கிறார். நாடகக் குழுவில் உள்ள கதாபாத்திரங்களின் தேர்ந்த நடிப்பு படத்திற்குப் பெரிய பலம்.

இதுவரை பார்த்த காதல் படங்களிலிருந்து ஒட்டுமொத்தமாக விலகி புதியதோர் உலகிற்கு நம்மை கைப்பிடித்து அழைத்துச் செல்கிறார் இயக்குநர் பா.ரஞ்சித். அந்த உலகில் காதல் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் மட்டுமானதாக இருக்கவில்லை. மாறாக அங்கே காதல் பாலின பேதங்கள், சாதி, மதங்கள், நிற வேறுபாடுகள் கடந்து மின்னுகிறது. குறிப்பாக அங்கே தன்பால் ஈர்ப்பாளர்களின் காதலும், திருநங்கையின் காதலும் தயக்கமில்லாமல் பேசப்படுகிறது. அங்கே ஆணுக்கு கட்டுப்பட்ட பெண்களையும், அழுது வடியும் பெண்களையும், மீட்பர் மனநிலை கொண்ட ஆண்களையும் பார்க்க முடியவில்லை. தமிழ் சினிமாவில் நிகழ்ந்திருக்கும் இந்த புதியதோர் முன்னெடுப்பை பாராட்டியாகவேண்டும்.

படத்தில் ரசிக்க நிறையவே இருக்கிறது. ஒட்டுமொத்த விஷுவலாக படம் நம்மை வேறொரு தளத்திற்கு அழைத்துச் செல்லுகிறது. காதலும், அதற்கான விஷுவல்ஸும், கூடவே வரும் இளையராஜாவின் பாடலும் என பல காட்சிகள் கவிதையாக விரிவது கண்களுக்கு விருந்து. ரஞ்சித்தின் ஆகப் பெரிய பலமே அவரது பரப்புரையில்லாத திரைக்கதை.

ரெனே அனைவருடனும் கலந்துரையாட எப்பொழுதும் தயாராக இருக்கின்றாள். எல்லாவற்றையும் கலந்துரையாடுவதன் வழி சரி செய்ய முடியும் என நம்புகிறாள். அப்படி ஒரு கலந்துரையாடலின் வழியேதான் அவள் நமக்கு அறிமுகம் செய்யப்படுகிறாள். அது இசை தொடர்பான ஒரு வாதம். அமெரிக்கப் பாடகர், செயற்பாட்டாளர் நினா சிமோனின் ரசிகராக இருக்கும் அவளுடைய காதலன் இனியனுக்கும்,



இளையராஜாவின் ரசிகையாக ரெனேவுக்கும் அந்த உரையாடல் விளக்கொளி போல் சுடர்விட்டு, நீண்ட காட்டுத்தீயாக வளர்கிறது. இரண்டு ஆதர்சங்களும் தத்தமது துறைகளில் சளைத்தவர்கள் அல்ல என்பதே விவாதம். அது மையப்புள்ளியிலிருந்து விலகி பல எல்லை மீறல்களையும் அடைகிறது. ஆனபோதும் அதைப் புன்னகையுடன் எதிர்கொண்டு சமராடும் ரெனே, இனியன் சொல்லும் பிறப்பு சார்ந்த தாக்குதல் ஒன்றுக்கு மட்டும் நொறுங்குகிறாள். நொறுங்கிய அடுத்த சில நொடிகளில் தன்னைத்தானே மீட்டெடுத்து தன் அடுத்தகட்டப் பாதையைத் தீர்மானிக்கின்றாள். அந்தப் பயணத்தில் அவள் நகரும் நட்சத்திரத்தைக் கண்டு பரவசம் கொள்கிறாள். திரையில் 'நட்சத்திரம் நகர்கிறது' என்கிற டைட்டில் அப்போது ஒளிர்கிறது.

இது மாதிரியான நீண்ட உரையாடல்கள் படத்தில் அதிகமுண்டு. காதல் பற்றிய உரையாடலும் அதிலொன்று.

முதல் முறையாகத் தமிழ் சினிமாவில் தலைமைக் கதாபாத்திரம் (Protagonist) ஒன்று, வலிமையான அம்பேத்கரியவாதியாகப் (Ambedkarite) படைக்கப்பட்டிருக்கிறது. மிக முக்கியமாக அது ஒரு பெண் கதாபாத்திரம் என்பதுடன், அவள் அரசியல், சமூக தெளிவுகளுடன் அத்தனை இன்னல்களிலிருந்தும் தன்னைத்தானே மீட்டெடுத்துச் செதுக்கிக் கொண்டே தன் பயணத்தைத் தொடரும் சுயாதீனப் பெண்ணாக வலம் வரச்செய்தது இயக்குநர் பா.இரஞ்சித்

ரெனேவின் உணவு, உடை, காதல், சமூகம், அரசியல் என அவளின் அத்தனை உணர்வுகளும் சிந்தனைகளும் அம்பேத்கரியமும் புத்தமும் கலந்த ஒரு வார்ப்பு. அவளுக்குத் தீங்கு விளைவித்த பிற்போக்குக்காரன் ஒருவன் மன்னிப்பு கேட்டு நகருகிறான். அந்த நொடியில், அவள் அவனைக் குழுவில் தொடர்ந்து இருக்கச் சொல்கிறாள்.

அரசியல் மயமாக்கல் என்பது ஒரு செயல்முறை. அது ஒருநாளில் நிகழாது. பிற்போக்குத்தனத்தில் இயங்குகிறவர்களுக்கு அந்த செயல்முறை நிகழ்வதற்கான கால அவகாசம் அளிக்கப்படவேண்டும் என்கிற அம்பேத்கர் மொழியைப் பேசுகிறாள். அந்த நொடியில் அவள் புத்தரின் உடல்மொழியில் அமர்ந்து இருக்கிறாள். இந்தக்காட்சி படத்தின் ஆன்மாவாக அத்தனை நேர்த்தியாகக் கையாளப்பட்டிருக்கிறது.

நூற்றாண்டு தமிழ் சினிமா அதன் பல முற்போக்கு கதாநாயகிகளை முன்வைத்திருக்கிறது. அந்த பட்டியலில் அம்பேத்கரியம் பேசும் ரெனே,காலம் உருவாக்கிய ஓர் உன்னதம்.அவள் மாட்டுக்கறியைச் சாப்பிட்டுக் கொண்டே வழக்கமான இந்தியச் சராசரிக் கதாநாயகர்களை மொக்கை பண்ணிவிடும் காட்சி பேரற்புதமானது.

'வர்க்கம் ஒழிஞ்சா சாதி ஒழியும்ங்குறதெல்லாம் சும்மா', 'நான் அப்டிங்குறது நான் மட்டுமல்ல அது என்னோட சமூக அடையாளமும் சேர்த்துதான்', 'நாடகக் காதல்', '200 ரூபா டீசர்ட்டு போட்டு கரெக்ட் பண்ற அளவுக்கா பொண்ணுங்க இருக்காங்க', 'ஆண்ட பரம்பரை', 'இளவரசன், சங்கர், ஆணவக் கொலைகள்' என சமரசமேயில்லாமல் திரை முழுவதும் அரசியல் நிரம்பிக் கிடக்கின்றது. மறுபுறம் எதிர் கருத்துடையவர்களை முற்றிலும் ஒதுக்கவிட வேண்டிய அவசியமில்லை. மாறாக, அவர்களும் சேர்ந்ததுதான் சமூகம் என்ற கண்ணோட்டமும் கவனிக்க வைக்கிறது. இதன் மூலம் ஒரு விரிவான உரையாடலை நிகழ்த்த முயற்சித்து, இங்கே நோக்கம் புறக்கணிப்பதல்ல... மாறாக உணர வைப்பது என்ற அரசியல் புரிதல் சிறப்பாக கையாளப்பட்டுள்ளது.

நாட்டார் தெய்வ வழிபாடு, புத்தர் பெயின்டிங், 'நோ மீன்ஸ் நோ', மாட்டுக்கறி, 'காட்டுப்பூனை, நாட்டுப்பூனை' வலிமையான பெண் கதாபாத்திரங்கள், இட ஒதுக்கீடு உள்ளிட்டவை ரஞ்சித் டச். படம் முழுக்க இளையராஜாவை ஒரு கதாபாத்திரமாகவே கொண்டு சென்றதும், அவருடைய பாடல்கள் காட்சிகளின் வழி இழையோடுவதும் ரசிக்க வைத்தது.

எப்படிக் கொண்டாடினாலும் படத்தின் நீளம் பார்வையாளர்களை ஒருகட்டத்திற்கு பிறகு நாற்காலியிலிருந்து நெளியவைக்கிறது. நிறைய இடங்களில் பரப்புரை நெடி சோர்வடைய வைக்கிறது. நிறைய கதாபாத்திரங்கள் இருந்தபோதிலும் அதற்கான ஆழமான எழுத்தின்மை, வலுவற்ற காரணங்களால் நிகழும் காதல் முறிவுகள், உடனே நல்லவராக மாறும் பாத்திரம் என ஆங்காங்கே சில வேகத் தடைகளும் உண்டு.

கிஷோர்குமாரின் ஒளிப்பதிவு காதல் காட்சிகளில் வண்ணங்களைக் கூட்டுகிறது. நாடகம், பாடல்கள், க்ளைமாக்ஸ் என அவரது கேமரா நட்சத்திரமாக பிரகாசிக்கிறது. தென்மாவின் இசை கதையோடு ஒட்டி பயணிப்பது பலம். 'ரங்கராட்டினம்', 'காதலர்' பாடல்கள் கவனம் பெறுகிறது. கலை இயக்கம் வெகுவாக ரசிக்க வைக்கிறது. படத்தின் ஒட்டுமொத்த டோனையும் மாற்றுவதில் கலை இயக்குநர் ஜெயரகுவின் பங்கு முக்கியமானது.

மொத்தத்தில் சில குறைகளை தவிர்த்துவிட்டு பார்த்தால் நட்சத்திரம் நகர்ந்துகொண்டே மின்னுவதை உணர முடியும். புதுவித திரை அனுபவத்திற்காக கட்டாயம் படத்தை பார்க்கலாம்.

---

## 67 லட்சம்...

குறிப்பிட்டுள்ளது.பாதிக்கப்பட்டவர்களின் இந்த எண்ணிக்கை வரும் மாதங்களில் எந்தத் தடையுமின்றி அதிகரிக்கும் என்றும் அறிக்கை எதிர்வுகூறியுள் ளது. நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து காணப்படும் உணவுப் பற்றாக்குறை மற்றும் விலையேற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள 34 லட்சம் மக்களுக்கு உலக உணவுத் திட்டம் தற்போது உதவிகளை வழங்கி வருகின்றது.

உணவுக்கான உதவி, பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு, சத்துணவு உதவி என்கிற வகையில் உலக உணவுத் திட்டத்தின் உதவிகள் அமைந்துள்ளன. பாடசாலை மாணவர்கள் 10 லட்சம் பேருக்கு வரும் மூன்று மாதங்களுக்கு மதிய உணவு வழங்கும் நோக்கத்துடன் 1,475 மெற்றிக்தொண் அரிசியையும் 755 மெற்றிக்தொண் இரும்புச் சத்துள்ள அரிசியையும் உலக உணவுத் திட்டம் வழங்கியுள்ளது. இலங்கைக்கான உதவிகளுக்காக 63 லட்சம் டொலர் நிதி உதவி தேவை என்று உலக உணவுத் திட்டம் அறிவித்திருந்தது. அதில் ஆஸ்திரேலியா, இத்தாலி, ஜப்பான், நியூசிலாந்து, நோர்வே, சுவிற்சர்லாந்து, ஐ.நா. மத்திய அவசர மீட்பு உதவி நிதியம், கொடையாளர்கள், தனியார் ஆகிய தரப்புகளிடமிருந்து இதுவரையில் 21.35 மில்லியன் டொலர் நிதி உதவி கிடைத்திருக்கிறது.

இலங்கையால் உணவுப் பற்றாக்குறையை ஈடுகட்ட போதுமான அளவு அரிசி மற்றும் பிற உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாவிட்டால், புரட்டாதி 2022 முதல் மாசி 2023 வரை, வரவிருக்கும் மெலிந்த பருவத்தில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு மேலும் மோசமடையும் என்று உலக உணவுத் திட்ட அறிக்கை கூறியது.

# அமைதியின் முகம் மிகைல் கோர்பசேவ்!

1931ஆம் ஆண்டு பங்குனி 2ஆம் நாள் ரஷ்யாவின் பிரிவோல்னோயீல் பிறந்த மிகைல் கோர்பசேவ் தனது கிராமத்தில் நாஜிக் களின் ஊடுருவலை நேரில் கண்டதால் போரின் சாட்சியாகத் தனது சிறுவயது வாழ்க்கை மாறி யதாக பலமுறை கூறியதுண்டு. தன்னுடைய 19 வயதில் சட்டம் பயில்வதற்காக மொஸ்கோ சென்ற இவர், கம்யூனிஸ்ட் கொள்கை மீது ஆர்வம் கொண்டு அக்கட்சியில் இணைந்து அரசியல் பணி யாற்றத் தொடங்கினார். 1985ஆம் ஆண்டு சோவி யத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட மிகைல் கோர்பசேவ், அதிபராக பதவியேற்றார்

மிகைலின் அரசியல் வாழ்வைப் பொறுத்தவரை அவர் சீர்திருத்தவாதியாகவே அறியப்படுகிறார். அவர் சோவி யத் யூனியனை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சீர்திருத்த விரும்பினார். அமெரிக்காவுடன் அணு ஆயுத ஒப்பந்தம் செய்துகொண்டார். மேற்கு நாடு களுடன் நட்புறவுக் கொண்டார். மிகைலின் இம்மாதி ரியான நடவடிக்கைகளை ரஷ்யர்கள் விரும்பவில்லை. ரஷ்யாவின் சூப்பர் பவர் அங்கீகாரத்தை மிகைல் சிதைப் பதாகவும், அவரது சீர்திருத்த நடவடிக்கைகள் பெரும் குழப்பத்திற்குக் காரணமாக இருப்பதாக அவர்கள் நினைத்தனர்.


எல்லாவற்றையும்விட, சோவியத்தில் இணைந்திருந்த நாடுகள் குடியரசாக மாறுவதற்கான உரிமையை மிகைல் வழங்கினார். இதனால் சோவியத் ஒன்றியத்தில் இணைந் திருந்த உக்ரைன் உட்பட 15 நாடுகள் விடுதலை பெற்று தனித் தனி நாடுகளாகின. 1989ஆம் ஆண்டு அமெ ரிக்க அதிபர் ஜார்ஜ் ஹெச்.டபிள்யூ.புஷ் உடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் காரணமாகப் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பனிப்போர் முடி வுக்கு வர இவர் காரணமாக இருந்தார். இதன் காரண மாக மிகைல் கோர்பசேவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு விருது 1990ஆம் ஆண்டு அளிக்கப்பட்டது.

தொடர் தடுமாற்றத்தை சந்தித்த மிகைல் கோர்பசேவ் ஆட்சி 1991ஆம் ஆண்டு முடிவுக்கு வந்து, சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தனது அதிபர் பதவியிலிருந்து அவர் விலகினார். போரிஸ் யெல்ட்சின் ரஷ்யாவின் அதிபராக பதவியேற்றார்.

மிகைல் கோர்பசேவ் தற்போது ரஷ்யாவின் அதிப ராக உள்ள புதின் குணநலன்களிலிருந்து முற்றிலும் மாறு பட்டவராக இருந்தார். மிகைல் பிற நாடுகள் மீதான படை யெடுப்பைத் தவிர்த்தார். மாறாக, பேச்சுகளை ஊக்கு வித்தார்.

சமீபத்தில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெ டுப்பையும் மிகைல் விமர்சித்தார். உக்ரைன் படையெ டுப்பு குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "மனித உயிர்களைவிட விலைமதிப்பற்றது எதுவும் உலகில் இல்லை. பரஸ்பர மரியாதை மற்றும் ஆர்வங்களின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பேச்சே மிகவும் கடுமையான முரண்பாடுகள் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரே சாத்தியமான வழி" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு தனது நாள் முழு வதும் அமைதியின் முக மாக அறியப்பட்ட சோவியத் தின் கடைசி அதிபரான மிகைல் கார் பச்சேவ் வயது முதிர்வுக் காரண மாக தனது 91ஆவது வயதில் ஆவணி 30ஆம் நாள் மறைந்தார். அமை தியின் உண்மையான தலை வர் என்று அறியப்பட்ட மிகைல் கோர் பசேவ் தனது நாள் வாழ்நாள் முழு வதையும் அதற்குச் சான் றாக்கி விடைபெற்றிருக் கிறார்.



இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.09.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781